மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 16 ★ 18-8-57 சென்னை ★ விலை 16 காசு

1857 ஒரு எல்லைக் கோடு!

—(0)—

அதற்கு நூறு ஆண்டுகளுக்குமுன் தென்னகத்தில் வீசிய புயல்

—(0)—

மைசூரும் வேலூரும் பாஞ்சாலங்குறிச்சியும் காட்டிய எழுச்சி

1857க்குப் பின் ஒரு நூற்றுண்டுக் காலம் கடந்து விட்டது!

1857ல் இந்தியப் படை வீரர்கள் பிரிட்டிஷ் இராணுவத் தலைமையை எதிர்த்து ஆங்காங்கு எழுந்தனர்! 1857ல் வெள்ளையர்கள் இந்தியாவில் இராணுவ பலத்தால், ஆள முயன்றனர்; 1957ல் இந்தியாவிலிருந்து வெள்ளையர் வெளியேறி பத்தாண்டுக் காலமாகிறது!

சோப்பும் சீப்பும் கண்ணாடியும் விற்கவந்த ஆங்கில வியாபாரிகள் சிறுகச் சிறுக உள்நாட்டுச் சச்சரவுகளில் தலையிட்டனர். பண்டக சாலைகள் கோட்டைகளாக மாறின, துலாக்கோல் பிடிக்க வேண்டிய கரங்களில் துப்பாக்கிகள் மின்னத் தலைப்பட்டன, வருகின்ற கப்பல்களில் மற்ற சாமான்களைவிட வெடிமருந்தும் துப்பாக்கிக் குண்டுகளும் காணப்பட்டன, வியாபாரிகளாக வந்தவர்கள் இங்குள்ள அரசுகளை வைத்து "வியாபாரம்" செய்யத் தலைப்பட்டனர், சந்தைக் கடையில் பேரம் செய்வதைப் போல தனிப்பட்ட அரசர்களுடன் பேரம் பேசினர், பணயம் வைத்தனர், விலைக்கு வாங்கினர், முடியாத சமயத்தில் கட்டாயமாக எடுத்துக் கொண்டனர். கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு ஏகாதிபத்தியத் தளமாக மாறியது.

வெள்ளையர் ஆதிக்கம் பரவும்பொழுது, அதற்கு எதிர்ப்பு வராமற் போகவில்லை. சில பகுதிகள் முதல் தடவையிலேயே அடங்கி விட்டன, சில பகுதிகள் போராடிப் போராடி வலுவிழந்த நிலையில், கோட்டை கொத்தளங்கள் இடிக்கப்பட்டு, கொடி மரங்கள் சாய்க்கப்பட்டு, போராடிய வீரர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டு, கடைசியாக கொடுமையால் அடக்கப்பட்டன. இன்று காணப்படும் நாட்டுப் பற்றும் மனவெழுச்சியும் அக்காலத்தில் முழுத்தன்மையுடன் பொலிவுறவில்லையெனினும், வெளி நாட்டானின் ஆதிக்கம் சொந்த நாட்டில் பரவுவதைத் தடுக்க முன்வந்த வீரர்கள்-ஒடிந்து வீழ்ந்தாலும் வீழ்வது, ஆனால் வளைந்துகொடுப்பதில்லை என வீரமரணத்தை ஏற்றுக்கொண்டவர் வரலாறுகள் ஏராளம்! அத்தகைய வரலாறுகளில் ஒன்றே 1857ல் ஏற்பட்ட வீரர்கள் எழுச்சி! அதற்கு முன்னும் பற்பல எதிர்ப்புகள், போராட்டங்கள், எழுச்சிகள் வெள்ளையர் ஆதிக்கத்துக்கு எதிராக இருந்துள்ளன! 1857 எதிர்ப்பு பழைய போராட்டங்களுக்கு ஒரு முடிவு கட்டத்தையும், புதிய அரசியல் நிலைமைகளுக்கு ஒரு ஆரம்பத்தையும் குறிப்பதாக உள்ளது.

1857ல் நடைபெற்ற எழுச்சி பெரும்பாலும் வட இந்தியாவில் அலை மோதியது. ஆனால் தென்னகம் உணர்ச்சியற்று, சுலபத்தில் அடங்கி விட்டதாக யாரும் நினைத்து விடக் கூடாது. தென்னகத்தில் எழுந்த எதிர்ப்பு அதற்கு முன்னதாகத் துவங்கியது! 1857ல் மீரத் நகரில் எழுச்சி தோன்றியது, ஆனால் அதற்கும் ஒரு நூற்றுண்டுக்கு முன்னதாகத் தென்னகத்தில் எழுச்சி தோன்றியது!

1750ல் தென்கோடியில், வீரம் மணக்கும் திருநெல்வேலிச் சீமையில் பாளையக்காரர்களின் எழுச்சி துவங்கியது! திருநெல்வேலிச் சீமையில் பாளையக்காரர் என்றதும், கட்டப் பொம்மன் நினைவு எவருக்கும் வராமற் போகாது. ஆனால் கட்டப்பொம்மனுக்கு முன்னதாகவே கிளர்ச்சிக் கனல் தோன்ற ஆரம்பித்து விட்டது. மூண்ட அந்தக் கனலில் ஒளி விடும் பெரு நெருப்பாய் கட்டப்பொம்மன் வந்தான். கட்டப் பொம்மனுக்கு முன்னதாக-அவனுக்கு இரண்டு தலை முறைக்கு முன்னதாகஎழுச்சியை ஆரம்பித்து வைத்தவன் பூலித் தேவன் என்பவன்!

பூலித் தேவன் நெல்கட்டுஞ் செவ்வல் என்ற பாளையத்துக்குத் தலைவனாக இருந்தான். அந்தப் பாளையமும் பாஞ்சாலங் குறிச்சியைப் போல முக்கியமானதாக இருந்தது. "வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் பூமிக்குக் காணிக்கை ஏன்?" என்று பின் கட்டப் பொம்மன் காணிக்கை செலுத்த மறுத்ததற்கு ஆரம்பமாகப் பூலித்தேவன் இருந்தான். பாளையக்காரர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, அவர்களுக்கு மேலாக ஆட்சி புரிந்து வந்த கருநாடக நவாபுக்கு திரை செலுத்த மறுத்து, கருநாடக நவாபுக்கு உதவியாக இருந்த வெள்ளையர் ஆதிக்கத்தையும் பூலித்தேவன் எதிர்த்தான். அதிலிருந்து பாளையக்காரர்களின் எதிர்ப்பு தொடர்ந்து.வந்தது பூலித்தேவன் ஆரம்பித்து வைத்த எதிர்ப்பு அரை நூற்றுண்டுக் காலம் ஆங்கிலப் படைகளை அலக்கழித்தது.

1750 நெல்கட்டுஞ்செவ்வல் பாளையத்தில் துவங்கிய எழுச்சி, மற்ற பாளையங்களிலும் பரவியது. 1772ல் இராமனாத புரத்திலும் சிவகங்கையிலும், எதிர்ப்பு தலைதூக்க ஆரம்பித்தது. சிவகங்கையில் முத்து வடுக நாதனும் அவருடைய மனைவி வேலுநாச்சியும், மருது சகோதரர்களும்வீரப்போர்கள் நடத்தினார்கள்.

காக மணுகாத பாஞ்சாலங் குறிச்சியில் கட்டப்பொம்மன் ஆட்சிக்கு வந்ததும்,போராட்டக்கொடி அங்கும் உயர்ந்தது. கட்டப் பொம்மனின் முழுப்பெயர் கருத்தையா என்கிற வீர பாண்டிய நான்காம் கட்டப்பொம்மன். 1785ல் கட்டப்பொம்மன் தலை தூக்கிய நாளிலிருந்து 1798ல் அக்டோபர் 10ல் கயத்தாற்றில் தூக்கி லிடப்படும் வரை அங்கு எழுச்சி கொந்தளித்தது. கட்டப்பொம்மனுக்குப் பின் அவன் தம்பி ஊமைத்துரையும், மருது வீரர்களும் போராடினார்கள். திருநெல்வேலிப் பாளையக்காரர்களின் எழுச்சி 1750 லிருந்து 1800 வரை தொடர்ந்திருந்தது என்று கூறலாம்.

தென் பகுதி எதிர்ப்பு குமுறிக் கொண்டிருந்த நேரத்தில், தென்னகத்தின் வட பகுதியிலும் போர்க் கொடி உயர்ந்தது. சந்தனம் மணக்கும் காடுகள் சூழ்ந்த மைசூர் பகுதியில், வீரம் தெறித்தது. "மைசூர்ப் புலி" எனப் பெயர் பெற்ற ஹைதர் அலியும், அவன் மகன் திப்புவும் ஆங்கிலப் படைகளை இடையறுது வெருட்டியபடி இருந்தனர். மைசூர்ப்போர்கள் சுமார் 40 ஆண்டுகள் வரை நடந்தன. ஹைதரும் திப்புவும் காட்டிய வீர தீரம் ஆங்கிலேயராலேயே போற்றுமளவு உயர்ந்திருந்தது. பாஞ்சாலங் குறிச்சியும் மைசூரும் தொடர்பு கொண்டு ஒருசேரப் போராடியிருந்தால், தென்னகத்து அரசியல் வரலாற்றில் பெரும் மாறுதலைச் செய்திருக்கமுடியும். இது போன்று சிற்றரசர்களிடமிருந்தும், பாளையக்காரர்களிடமிருந்தும் அவ்வப்பொழுது ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு வந்த வண்ண மிருந்தது.

1857ல் இந்திய சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வேலூர்க் கோட்டையில் போர் வீரர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். 1806 ஜூலை 10 வேலூர் எழுச்சி ஆரம்பித்தது. ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். ஆனால் அந்தக் கிளர்ச்சியை மிகக் கொடூரமான முறையில் ஆங்கில இராணுவத்தினர் அடக்கினர். வேலூர்க் கோட்டையில் கிளர்ச்சி செய்தவர்களில் கிளர்ச்சியின் போது மட்டும் 600 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

வினா: பெரியார் அவர்கள் ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடும்போது, தி. மு. கழகத்தினர் அப்படிச் செய்யாததன் காரணமென்ன?

விளக்கம்: பெரியார் இராமசாமி அவர்கட்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள பலர்க்கும் முதன் முதலாக, வெளிப்படையாகக் கருத்து வேற்றுமை தோன்றுவதற்கு முக்கிய காரணமாக விளங்கியது, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளாகும். அப்பொழுது எல்லோரும் திராவிடக் கழகமாகிய ஒரே அமைப்பில்தான் இணைந்திருந்தனர் என்றாலும், கருத்து வேற்றுமை வெடித்து வெளிக்கிளம்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் துக்கம் கொண்டாடுவதற்குரிய நாள் என்பது பெரியார் அவர்களின் கருத்தாகும். அந்தக் கருத்து சரியானதா அல்லது தவறானதா என்பதைப் பற்றி அவர் யாரோடும் கலந்தாலோசிக்கவில்லை. சனநாயக முறைப்படி கழகத்தின் செயற்குழுவையோ அல்லது பொது உறுப்பினர்களையோ கூட்டி வைத்து அந்தக் கருத்து பற்றிய ஒருமித்த முடிவை எடுக்கவும் முற்படவில்லை. தாம் கொண்ட கருத்துக்கு மாறுபாடான எண்ணம் உடையவர்கள் கழகத்தில் யாரேனும் இருக்கிறார்களா என்பதைக் கண்டறியவேண்டுமென்றோ, அவர்களின் மாறுபட்ட கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும் என்றோ, கேட்டறிந்து அவற்றிற்குச் சமாதானம் கூற வேண்டும் என்றோ, பிறகு பெரும்பான்மையோர் முடிவுக்கு விட்டு அதனபடி நடக்க முன்வரவேண்டும் என்றோ அவர் கருதவில்லை. பெரியார் அவர்கள் தாம்தான் கழகம், தமக்காகத்தான் கழகம், தாம் சொல்வதைத்தான் கழகம் ஏற்கவேண்டும் என்னும் சர்வாதிகார மனப்பான்மையோடு, "திராவிடக் கழகம் 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடும்" என்று அறிக்கை வெளியிட்டார்.

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் மகிழ்ச்சிக்குரிய ஒரு நாளேயல்லாமல், அது துக்க நாளல்ல என்பது அறிஞர் அண்ணாவும் அவர் போன்றோரும் கொண்டிருந்த கருத்தாகும். ஆகஸ்டு 15 பற்றி என்ன முடிவு எடுப்பது என்று கழகச் செயற்குழுவிலோ அல்லது பொது உறுப்பினர் குழுவிலோ, பிரச்சினை எழுந்தாலும், அல்லது பெரியார் அவர்கள் தனியே கலந்தாலோசித்தாலும் ஆகஸ்டு 15 ஆம் நாளைப் போற்றி மகிழ்வதற்குரிய நாளாகவே கொள்ளவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தும் நோக்கத்தோடேயே அறிஞர் அண்ணா அவர்களும், அவரைச் சார்ந்த பிறரும் இருந்தனர். ஆனால் பெரியார் அவர்கள் யாரையும் கலக்காமல், எந்த ஆலோசனைக்கும் இடமளிக்காமல் ஆகஸ்டு 15 ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று திடீரென்று அறிக்கை வெளியிட்டுவிட்டார்கள். அந்தக் கருத்தைப் பெரியார் அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக அறிஞர் அண்ணா அவர்கள் நேரிய பலவழிகளிலும் முயன்று பார்த்தார்கள். பெரியார் அவர்கள் யாரையும், எதையும் பொருட்படுத்தாமல் தாம் கொண்ட கருத்திலேயே பிடிவாதமாக இருந்தார்கள். அதற்குப்பின்தான், அறிஞர் அண்ணா அவர்கள், பல இயக்க நண்பர்களின் சார்பாக, ஆகஸ்டு 15 ஆம் நாள் துக்க நாள் அல்ல என்பதை அறிக்கை மூலம் நாட்டுக்கு விளக்கிக் காட்டவேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டது.

1947 ஆகஸ்டு 15-இல் என்ன முக்கிய நிகழ்ச்சி ஏற்பட்டது என்று பார்த்தால், வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் இந்திய ஆட்சி அதிகாரத்தை இந்தியர்களுக்கே மாற்றுவது என்பதாகும். வெள்ளையரின் அதிகாரம் இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு அகலுவது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியே ஒழிய, துக்கம் கொண்டாடுவதற்கு உரிய செய்தி அல்ல என்பது அறிஞர் அண்ணாவுடையவும், அவரைச் சார்ந்தவர்களுடையவுமான கருத்தாகும். அந்த நாளை நாம் துக்கநாளாகக் கொண்டாடுகிறோம் என்றால், வெள்ளையரின் அதிகாரம் மாறுவதை நாம் விரும்பவில்லை என்று பொருள், அவன் அதிகாரம் இந்தியாவில் நீடித்து இருக்கட்டும் என்று நாம் விரும்புகிறோம் என்று பொருள். ஆகவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் தவற்றைச் செய்ய விரும்பாததோடு, வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திற்குத் தாசர் என்ற கறை தம்மீதும் தம் அரசியல் பரம்பரையினர் மீதும் படாமல் பார்த்துக் கொள்ளவேண்டி, 1947 ஆகஸ்டு 15 துக்கநாள் அல்ல, மகிழ்ச்சிக் கொண்டாட்டத்திற்குரிய நாளேயாகும் என்று அறிக்கை வெளியிட்டார்.

அதிகார மாற்றம் காங்கிரசுக்காரர்கள் கைக்கு வந்துவிட்டது என்ற ஒரு காரணத்திற்காக அந்த நாளைத் துக்க நாளாகக் கருதி என்றென்றும் வெள்ளையனுக்கு அடிமையாக இருக்க நினைப்பது தவறு என்றும், காங்கிரசுக்காரர்கள் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி வைத்திருந்ததால், அதிகாரம் அவர்கள் கைக்குச் சென்றது என்றும், அதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தி வைத்திருந்தால் அதிகாரம் நம்கைக்கு வந்திருக்கும் என்றும், அதிகாரம் நம்கைக்கு வரவில்லையே என்பதற்காக ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்கநாளாகக் கொண்டாடுவது அடிமைத் தன்மையைக் காட்டுமேயொழிய விடுதலை வேட்கையுணர்வைக் காட்டாது என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக்கிக் காட்டியிருந்தார்கள்.

இந்திய சுதந்திரத்தைப்பற்றிக் காங்கிரசுக்காரர்கள் பேசிக்கொண்டிருந்த அந்தநேரத்தில் நாம் திராவிடநாடு விடுதலையைப்பற்றி வற்புறுத்தி வந்தோம். வெள்ளையனே திராவிட நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்டுச் செல்லுகிற அளவுக்கு அப்பொழுது சூழ்நிலை உருவாகவில்லை; நாமும் உருவாக்கவில்லை. எனவேதான் அகில இந்தியாவின் ஆதரவைப்பெருமளவில் பற்றியிருந்த காங்கிரசு இந்தியாவின் அதிகார மாற்றத்தைப் பெற்றுக்கொண்டது; வெள்ளையனும் காங்கிரசைக் கூப்பிட்டுக் கொடுத்துவிட்டுச் சென்றான். திராவிடநாட்டு விடுதலை கோரிக்கையை வற்புறுத்தி வந்த நாம் அப்பொழுது இரண்டு ஆதிக்கக்காரர்களை ஒழிக்கவேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டிருந்தது. ஒன்று பிரிட்டிஷ் ஆதிக்கம், மற்றொன்று வடநாட்டு ஆதிக்கம் ஆகும். இந்த இரண்டில் ஒரு ஆதிக்கமான பிரிட்டிஷ் ஆதிக்கம் 1947 ஆகஸ்டு 15 இல் அகன்றது. இது திராவிட மக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகத்தான் இருக்கமுடியுமேயல்லாமல், துக்ககரமான செய்தியாக இருக்கமுடியாது. இப்பொழுது ஒழிக்கப்படவேண்டியதாக இருக்கும் ஆதிக்கம் வடநாட்டு ஆதிக்கமேயாகும்; வெள்ளையன் ஆதிக்கத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய இன்றியமையாமை இல்லாமற் போயிற்று.

திராவிடநாட்டு விடுதலையை வற்புறுத்தும் நமக்கு வேண்டுமானால் ஆகஸ்டு 15ஆம் நாள் முழு மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய விடுதலைநாளாக இல்லையே ஒழிய, அது ஒரு அளவுக்கு, அதாவது வெள்ளை ஏகாதிபத்தியம் வெளியேறிய அளவுக்கு மகிழ்ச்சி கொள்ளவேண்டிய நாளேயாகும், அது எந்தவகையிலும் துக்கத்திற்குரிய நாளாக அமையவில்லை. இக்காரணங்கள் பற்றிதான் தி. மு. கழகத்தினர் ஆகஸ்டு 15ஆம் நாளை ஆண்டுதோறும் துக்கநாளாகக் கொள்ளவில்லை; வெள்ளையன் வெளியேறிய அளவுக்கு மகிழ்ச்சிக்குரிய நாளாகவே கொள்ளுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர்க்கு முழு மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய நாள் திராவிடநாடு விடுதலை நாளேயாகும். —இரா. நெ.

நங்கவரம் அக்ரமம்!

நாட்டினரே காணீர்! நியாயம்தர வாரீர்!

2000 உழவர் குடும்ப உரிமை பறித்து வயிற்றில் அடிக்கிறார் பண்ணையார்!

23-8-57

உழவர் உரிமை பெற அறப்போர்! இதயமுள்ளோரே துணைநிற்பீர்!

—விவசாயிகள் முன்னேற்றக்கழகம்
குளித்தலைவட்டம்.

கடைசி வேண்டுகோள்!

குளித்தலையில் மாபெரும் விவசாயிகள் அணிவகுப்பு

22-8-57

மாலை 6 மணிக்குக் குளித்தலை திரு. வி. க. திடலில்

தோழர் கருணாநிதி தலைமையில்

அறிஞர் அண்ணா

பேசுவார்.

—திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

மன்றம்

ஞாயிறு 18—8—57 சென்னை

இந்தி ஏகாதிபத்தியம்

இந்தி ஏகாதிபத்தியம் மீண்டும் தலை தூக்குகிறது! இந்தி வெறி மீண்டும் கோரப்பற்களுடன் சுற்றிலும் பார்க்கிறது!

நஞ்சைப் பாய்ச்சும் பாம்பு, சிறிது நேரம் படமெடுத்தாடி பின் திடீரென்று ஒரு கொட்டு கொட்டி, மீண்டும் சிறிது நேரம் படமெடுத்தாடி மறுபடியும் கொட்டுவதைப் போல, இடையிடையே வேடிக்கை பல காட்டி, விளையாட்டுத்தனமாக இருப்பது போல நடித்துப் பின் திடீரென்று தனது நச்சுத் தன்மையை இந்தி வெறி பாய்ச்சி விடுகிறது!

இந்தியா அனைத்தையும் ஒன்று படுத்த தேசிய மொழியாக இந்தி பரவவேண்டும் என்ற நம்பிக்கையின் மீது மத்திய அரசாங்கமும், இந்தி ஆதரவாளர்களும் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க விரைகின்றனர்.

இந்திய துணைக் கண்டம் முழுவதையும் ஒரே ஆட்சி, ஒரே ஆதிக்கம், ஒரே மொழி, கீழ்க் கொண்டுவர முயற்சிகள் செய்யப் படுகின்றன. டில்லி ஆட்சி பீடத்தின் கீழ் இந்தியா முழுவதையும் அடக்கி விட, இந்தி மொழி இந்தியா முழுவதும் பரவவேண்டும் என்ற ஆதிக்க வெறி தோன்றியுள்ளது.

அரசியல் ஏகாதிபத்தியத்துக்கு உதவியாக மொழி ஏகாதிபத்தியம் உண்டாக்கப்படுகின்றது. ஒரு குடைக் கீழ் இந்திய துணைக் கண்டத்தைக் கொண்டுவர, ஒரு மொழிக்குக் கீழ் மற்ற எல்லா மொழிகளையும் கொண்டுவர முயல்கின்றனர்.

எல்லோருக்கும் ஒரே மொழி, ஒரே ஆட்சி, ஒரே கட்சி ஒரே ஏகாதிபத்தியம் என்று ஒற்றுமையின் பேரால் ஏகாதிபத்திய வெறி வளர்க்கப்படுகிறது.

எல்லோருக்கும் ஒரே மொழி என்று கூறுவது எல்லோருக்கும் ஒரே குல்லாய் என்று கட்டளையிடுவதைப் போலிருக்கிறது. ஒரு குல்லாய்க்குள் எல்லாத் தலைகளும் போயாக வேண்டும், வெளியில் நீட்டிக்கொண்டிருக்கிற தலைகளை வெட்டிவிட வேண்டும். கடைசியாக குல்லாய்க்குள் இருக்கிற ஒரு தலை மட்டும்தான் மிஞ்சும். அதைப்போல, இந்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையில், கடைசியில் இந்தி மட்டும் மிஞ்சும்படியான சூழ்நிலை உண்டாக்கப்படுகிறது.

இந்திய துணைக் கண்டம் முழுவதையும் இந்திமயமாக்கும் வேலைக்கு உதவியாக, கடந்த வாரத்தில் இரண்டு செய்திகள் வெளிவந்துள்ளன. ஒன்று அரசாங்க மொழிக் குழுவினரின் அறிக்கை, இரண்டாவது தேவநாகரி லிபியைப் பொதுவாக்க வேண்டுமென்று ஐதராபாத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் பேசியிருப்பது! இவை இரண்டும் இந்தி மொழியினருக்கு உற்சாகத்தைத் தந்துள்ளதேனும், இந்தி தவிர்த்த மற்ற மொழியினரிடம் பெரும் அச்சத்தை உண்டாக்கியுள்ளது.

காலஞ் சென்ற பி. ஜி. கெர் தலைமையில் அரசாங்க மொழி பற்றி ஆராயக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர் தமது அறிக்கையை ஓராண்டுக் காலத்துக்கு முன்னமே தந்தனர். இருந்தாலும் மத்திய அரசாங்கம் அந்த அறிக்கையை உடனே வெளியிடவில்லை. மிகத் தயங்கி, தாமதப்பட்டு ஓராண்டு கழித்து— அதை உருவாக்கிய குழுவின் தலைவர் கூட இறந்துவிட்டார், அவர் இறந்த பின்-அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது. ஏன் தாமதப்பட்டது? ஓராண்டுக் காலமாக அந்த அறிக்கையை வெளியிட அரசாங்கம் ஏன் தயங்கியது? அறிக்கையின் தாமதத்தைப் பற்றிப் பத்திரிக்கைகள் எழுதும் பொழுது, "மொழி வழி மாநிலங்களின் கிளர்ச்சிக் கொந்தளிப்பு அடங்காத நேரத்தில், இந்த அரசாங்க மொழிக் குழுவின் அறிக்கையை வெளியிட்டால் மேலும் கோபதாபங்கள் உண்டாகுமாதலால், அரசாங்கம் தாமதப்படுத்தி அறிக்கையை வெளியிட்டுள்ளது" எனக் காரணம் தருகின்றன. மற்ற மொழியினரிடை உண்டாயிருக்கும் கொந்தளிப்பை மேலும் அதிகப்படுத்தாமலிருக்க அரசாங்கம் அவ்வாறு செய்துள்ளது. ஆக இந்த அறிக்கை மற்ற மொழியினர்களின் மனதைப் புண்படுத்தும், அதனால் கோபதாபங்கள் உண்டாகும் என்பதை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது. மற்ற மொழியினரைப் புண்படுத்தும் வகையில் அறிக்கை இருக்கிறது. பின் எதற்காக அந்த அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டது? மற்ற மொழியினர்களுக்கு அச்சமூட்டும் வகையில் ஒரு அறிக்கையைத் தீட்டச் செய்வானேன்; பின் அந்த அறிக்கையை வெளியிடத் தயங்குவானேன்? ஒரு புறம் ஏகாதிபத்திய வெறி தூண்டுகிறது, மற்றொரு புறம் கிளர்ச்சிகள் சூழுமே என்ற அச்சம் பின்னாலிழுக்கச் செய்கிறது!

மொழிக் குழுவினரின் அறிக்கைப்படி பார்த்தால், நமது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்பட்டுவிடும். அந்த அறிக்கைப்படி, சட்டசபை நடவடிக்கைகள் இந்தி மொழியில் இருக்கவேண்டும்; உயர்நீதி மன்றத் தீர்ப்புகள் இந்தியில் இருக்கவேண்டும்; பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் இந்தியில் நடைபெறும்; இரயில்வே, தபால்-தந்தி, விமானம், பொதுவான தொழில் துறைகள் எல்லாவற்றிலும் இந்தி வந்துவிடும், பள்ளிக் கூடங்களில் இந்தி கட்டாய மொழியாகும்; அரசாங்க உத்தியோகங்களில் இருப்பவர்களுக்கு இந்தி கட்டாயப்படுத்தப்படும். இவ்வாறு ஒரு நாட்டின் அன்றாட வாழ்வில் தேவையான துறைகள் அனைத்திலும் இந்தி மொழி நிலவும். இந்தியாவிலுள்ள மற்ற மொழிகள் மங்கி மறைய, இந்தி மட்டும் தனி மொழியாக உலவும். "இந்தியா என்பது பாரத், பாரத் என்பது உத்தரப் பிரதேசம்" என்று முன்பொருமுறை டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் குறிப்பிட்டார், அது உண்மையாகி "இந்தியாவின் மொழி இந்தி!" என்றாகிவிடும். உத்தரப் பிரதேசம் இந்தியாவை ஆளும், உத்தர பிரதேச இந்தி இந்தியாவின் "தேசிய" மொழியாகும்! அண்ட சராசர மெல்லாம் ஆண்டவனிடம் ஒடுக்கம் என்பதைப்போல, இந்தியா முழுவதும் இந்தி வெறியர்களின் கையில் அடங்கி விடும்!

மற்ற மொழிகளைப் பின்னுக்குத் தள்ளி இந்தி மொழியை வளரச் செய்யும் முயற்சியுடன், மற்ற மொழி எழுத்துக்களையும் இந்தி எழுத்துக்களாக்கும் இரண்டாவது முயற்சி செய்யப்படுகிறது! இதற்கு குடியரசுத் தலைவரும் ஆதரவு தந்திருக்கிறார்! எழுத்துக்கள் மட்டுமல்ல, எண்களைக் கூட இந்தியில் இருப்பதைப்போல, எழுத வேண்டுமென்று திட்டங்கள் தரப்படுகின்றன! பின் உடை, உணவு வரை இந்த இந்தி வெறி சென்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

தென்னாட்டு மொழிகளுக்கும் வடநாட்டு மொழிகளுக்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. தென்னாட்டு மொழிகளிடை நிலவும் ஒற்றுமை, தென்னாட்டு மொழிகளுக்கும் வடநாட்டு மொழிகளுக்கும் இடையில் கிடையாது. இந்த நிலையில், வடநாட்டு மொழியைத் தென்னாட்டின் மீது சுமத்துவதோ, வடநாட்டு வரி வடிவத்தைத் தென்னாட்டில் கொண்டு வரச் செய்வதோ கூடாத காரியங்கள். மொழி வேற்றுமைகளை அகற்ற எடுக்கப்படும் முயற்சி, இருக்கும் வேறுபாடுகளை இன்னும் அதிகமாக்கத்தான் பயன்படும். மொழிப்பற்றை அலட்சியப் படுத்தினால், உறங்குகின்ற புலியை இடறுகின்ற குருடன் போல அவதிப்படநேரிடும்!

நமக்கு ஆங்கிலம் எவ்வளவு அந்நிய மொழியோ, அவ்வளவு அந்நிய மொழிதான் இந்தியும்! ஆங்கிலம் இரண்டு நூற்றாண்டுகளாகப் பழகிவிட்டது, இந்தி இனிமேல் பழகவேண்டும். மேலும், ஆங்கிலம் கற்பதனால் உண்டாகும் பலன்கள்-உலகத் தொடர்பு, விஞ்ஞானக் கல்வி, தொழில் வளர்ச்சிகள், இந்தி மொழியால் சிறிது கூடக் கிடைக்கப் போவதில்லை! ஆக, உள் நாட்டில் வழங்கத் தாய்மொழியும், வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ள இப்பொழுதுள்ளதைப்போல ஆங்கிலமும் போதுமானது!

இலக்கியம்



காளையுடன் ஓடிப்போன மான்!

இரா. நெடுஞ்செழியன்

அவள் செல்வக்குடியிற் பிறந்த சீரியோளாதலாலும், அவளது தாய் தந்தையர்க்கு ஒரே மகளாதலாலும், அருமையாகக் காப்பாற்றப்பட்டுப் போற்றி வளர்க்கப்படுகிறாள்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவளை வளர்த்துவருவதிலே, செவிலித்தாய், மிகவும் கவனம் செலுத்திவருகிறாள். மகள் எங்குச் சென்றாலும் அவளை நிழல் போல் தொடர்வதும், அவள் உறங்கும்போது அருகிலிருந்து பாதுகாப்பதும், அவள் அண்டை வீட்டுப் பெண்களோடு ஓடி விளையாடும் போது தொலைவிலிருந்து கண்டு மகிழ்தலும் செவிலியின் பொழுதுபோக்குகளாகும்.

மகள் இளம் பெண்ணாக இருக்கும்போது செவிலித்தாயும், நற்றாயும் மாலைப் பொழுதுகளில், மாளிகையின் தாழ்வாரத்தில் வந்து அமர்ந்திருந்து, மகளின் விளையாட்டுக்களை வேடிக்கை பார்த்து மகிழ்வார்கள். மகள் அக்கம் பக்கத்துப் பெண்களோடு சேர்ந்து ஓடிப் பிடித்து விளையாடுதலையும், மணல்வீடு கட்டி மகிழ்தலையும், பந்தெறிந்து விளையாடுதலையும் பாவை வைத்து விளையாடுதலையும் கண்டு மகிழ்தல் நற்றாய்க்கு மாலை நேரப் பொழுதுபோக்காகும்.

மகள் அறிவோடும் ஆற்றலோடும் வளர்ந்து வருவது தாய் தந்தையர்க்குப் பெரிதும் பூரிப்பைத் தருகிறது. ஒரு நாள் மகள் பந்தெறிந்து விளையாடிக் கொண்டிருந்தபோது, மாளிகையின் முன்புறத்தில் அழகாகப்படரவிட்டிருந்த வயலைக் கொடியைக் கன்றுபோட்ட பசு ஒன்று வந்து தின்னத் தொடங்குகிறது. அதனைக் கண்ட மகள் விளையாடிக் கொண்டிருந்த பந்தை விட்டெறிந்துவிட்டு, விளையாட்டுப் பொம்மையை ஒரு பக்கம் வைத்துவிட்டு, அழகிய வயலைக் கொடியைப் பசு பாழக்குகிறதே என்று கூச்சல் போட்டுக் கொண்டு, தன்னுடைய அழகிய வயிற்றில் அடித்துக் கொள்கிறாள். வயலைக் கொடி பாழாகுவதற்காக அலறித் துடித்து அழுது கொண்டிருக்கிற மகளைக் கண்ட நற்றாயும், செவிலியும் ஓடோடிப் போய்ப் பசுவைத் துரத்துகிறார்கள். பின்னர் அவள் அழுகையை நிறுத்துகிறாள். மகள் சிறுவயதிலேயே வீட்டு உடைமைகள் மீது கருத்தும், கவலையும் கொண்டிருப்பது தாய் தந்தையர்க்குப் பெருமிதத்தைத் தருகிறது.

மகள் செல்வமாக வளர்ந்து வருவதால், அவளுக்கு நெடிது நாட்கள் வரையில் செவிலித் தாய் பாலையும், உணவையும் ஊட்டியே வருகிறாள். மகள் அவ்வளவு எளிமையாக அவற்றை உண்ணுவதில்லை. உண்ண மறுத்து, விம்மி விம்மி அழுது பிறகுதான் சிறிது சிறிதாக உண்ணுவாள். அவளுக்கு ஊட்டுவதென்றால், செவிலித்தாய்க்கும் நற்றாய்க்கும் போதும் போதும் என்றாகி விடும். மகள் தக்க பருவம் அடைகிறாள். அவள் தக்க பருவமடைந்த பெண்ணாக மாறிய நிலையிலும் கூட தேனோடு கலந்த இனிய பாலை அவளுக்குக் கொடுக்க செவிலித்தாயும், நற்றாயும் மிகவும் அல்லற்படுகிறார்கள். மகள் அந்தப் பருவத்திலும் வேண்டாவெறுப்போடு விம்மி அழுது கொண்டுதான் பாலைப் பருகுகிறாள்.

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

அழகிய கறுத்த தாடியும் மீசையும் கொண்ட கட்டிளங் காளை யொருவனோடு காதல் தொடர்புகொள்ளும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படுகிறது. இருவரும் தலைவன் தலைவியராய்க் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர். தாய் தந்தையரும் உற்றார் உறவினரும் அறியா வண்ணம், தலைவி களவொழுக்கம் இனிது நடத்திவருகிறாள்.

அவ் இளங்காதலர்கள் நடத்தும் களவொழுக்கம் எப்படியோ அலர்தூற்றும் வம்புப் பெண்டிர்களின் காதிற்கு எட்டிவிடுகிறது. களவொழுக்கச் செய்தி ஊரிலுள்ள வம்பு பெண்டிர்க்குத் தெரிந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட தலைவனும் தலைவியும், என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறார்கள். தன்னுடைய தாய் தந்தையர்க்குத் தெரிந்து விட்டால், தன்னைச் சிறைப் படுத்திவைத்து விடுவார்களே என்றும், அருமைக் காதலனை இனி என்றென்றும் காண முடியாமற் போய்விடுமே என்றும் எண்ணிக் கண்கலங்குகிறாள். ஏதேனும் ஒருவழியை எப்படியும் கண்டுபிடித்துவிடலாம் என்று, தலைவன் அவளுக்கு அடிக்கடி ஆறுதல் கூறி வருகிறான்.

கலக்கத்தோடு சில நாட்கள் கழிந்த பிறகு, நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழி ஒன்றைத் தலைவன் கண்டுபிடிக்கிறான். வாட்டத்தோடு காணப்படும் தலைவன் திடீரென்று மகிழ்ச்சியோடு தோன்றுவதைத் தலைவி காண்கிறாள்.

"என்ன, இன்று மகிழ்ச்சியோடு காணப்படுகிறீர்கள்? தப்பிப்பதற்கு ஏதேனும் வழி கண்டு பிடித்துவிட்டீர்களா?" என்று தலைவி கேட்கிறாள்.

"வழி ஒன்று கண்டுபிடித்துள்ளேன்! அதனால்தான், மகிழ்ச்சியோடு உன்னைக் காண வந்திருக்கிறேன்!" என்கிறான் தலைவன்.

"என்ன வழி கண்டுபிடித்துள்ளீர்கள்?"

"கண்ணே! நான் உனக்கு வழியைச் சொல்லிக் கொடுத்தால், நீ எனக்கு என்ன தருகிறாய்?"

"வழி சொன்னால், ஆயிரம் முத்தங்கள் தருகிறேன்?"

"வெண் முத்தங்களா?"

"இல்லை, சுவைமுத்தங்கள்!"

"அப்படியானால் இப்பொழுது முதலில் கொஞ்சம் கொடு!"

"வழியைக் கூறினாலல்லவா தருகிறேன் என்று கூறினேன்!"

"நீயும் நானும் யாருக்கும் தெரியாமல் இவ்வூரை விட்டு ஓடிவிடுவதுதான் ஏற்ற சிறந்த வழியாகும்!"

"அப்படி ஓடினால் அதனை என் தாய் தந்தையர் கண்டு பிடித்து என்னையும் கொன்று போட்டுவிடுவார்களே?"

"அவர்கள் எப்படி நம்மைக் கண்டு பிடிப்பார்கள்? நாம் தான் அவர்களின் கண் காணாமல் ஓடிப்போய்விடப் போகிறோமே!"

"எப்படியாவது அவர்கள் தேடி வந்து விட்டால்; என்ன செய்வது?"

"அப்படியே வந்துவிட்டால் தான் என்ன? எனக்குள்ள செல்வத்தையும், செல்வாக்கையும், ஆடம்பரங்களையும், என் மாளிகையிலுள்ளோர் உன்னைப் போற்றிக் காப்பாற்றி பாராட்டுதலையும் உன் தாய் தந்தையர் கண்டால், மகள் செய்த செயல் அறநெறியேதான் என்று அறிந்து பின் நமது திருமணத்திற்கு ஒப்புதல் அளித்து விடுவார்கள்!"

"இப்பொழுது திருமணத்திற்கு இசைவு தருமாறு என் தாய் தந்தையரைக் கேட்டு விட்டால் என்ன!"

"இப்பொழுது என்னைப் பற்றியும், என் செல்வம், செல்வாக்கு முதலியன பற்றியும் இவர்களுக்கு ஏதொன்றும் தெரியாததால், எனக்கு உன்னைத் திருமணம் செய்துவைக்க ஒருநாளும் இசைவுதர மாட்டார்கள்!"

"அப்படியானால் எப்பொழுது நாம் வெளியூருக்குப் புறப்படவேண்டும்?"

"நாளை இதே இரவுக்குறி இடத்திற்கு வந்துவிடு. இரவு கழிந்த பிறகு விடியற்காலையில் புறப்பட்டு நீயும் நானும் என்னுடைய ஊருக்குப் போய் விடுவோம்!"

"உங்களுடைய ஊரில் யாரேனும் நமது முயற்சியைத் தடுத்து நிறுத்த முன்வரமாட்டார்களா?"

"ஊருக்கே நான் தலைவனாதலாலும், என்னை மீறியவர்கள் என் மாளிகையிலோ அல்லது ஊரிலோ எவரும் இல்லையாதலால், யாரும் நமக்கு மாறுபட வர மாட்டார்கள்"

"அப்படியானால் எல்லா ஏற்பாட்டோடும் நாளை இரவு வருகிறேன்! நான் போய் வரட்டுமா?"

"முத்தங்கள் எங்கே!"

"இதோ பெற்றுக் கொள்ளுங்கள்!" என்று கூறி அவள் முத்த மழை பொழிய அவனும் திரும்ப வாரி இறைக்கிறான். பின்னர் இருவரும் பிரிந்து செல்கிறார்கள்.

மறுநாள் இரவு, இருவரும் இரவுக்குறியிடத்தில், சொல்லி வைத்ததற்கொப்பக் கூடி வெளியூர்ப் புறப்பட ஆயத்தமாகிறார்கள். விடியற்காலையில் தலைவனும் தலைவியும் புறப்பட்டுக் கொடிய பாலை நிலத்தின் வழியே யாரும் அறிந்து கொள்ளா வண்ணம் மெல்ல மெல்ல ஒளிந்து மறைந்து செல்கிறார்கள். இறுதியாகத் தலைவனுடைய ஊரைச் சென்றடைகிறார்கள்.

நற்றாயும், செவிலியும் மறுநாள் காலையில் எழுந்தவுடன் தலைவியைக் காணாமல் தவிக்கிறார்கள், மாளிகையின் தெருப்புறத்திலும், கொல்லைப் புறத்திலும், அக்கம் பக்கத்திலும்

(9-ம் பக்கம் பார்க்க)

லால்பகதூரின் வேலைத்திறன்

——(0)——

மத்திய அரசாங்கம் நெருக்கடிகளைச் சமாளிக்கிறது, தீர்க்கவில்லை.

——(0)——

முதலாளி மனப்பான்மை தோல்வியுறும்.

——(0)——

லால் பகதூர் சாஸ்திரி ஒரு வகையில் விவேகமுள்ளவர் என்றுதான் சொல்லவேண்டும். நெருக்கடிகள் வந்தால் எப்படியாவது தப்பித்துக் கொள்ளுமளவுக்கு விவேகம் இருக்கிறது, ஆனால் முன்கூட்டியே எதிர்பார்த்து வரக்கூடிய நெருக்கடிகளைத் தீர்க்கக் கூடிய அளவு விவேகம் இருப்பதாகத் தெரியவில்லை. நெருக்கடி தூரத்தில் காணப்படும் பொழுது அலட்சியமாக சிரித்துக் கொண்டிருப்பார், பின் அருகில் வர வர மற்றவர்களுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார், வேடிக்கை பார்க்கும் சிறு குழந்தையைப் போல. பின் அந்த நெருக்கடி அவர் கதவைத் தட்டும் பொழுது தான், தப்பித்துக்கொள்ள வழி பார்ப்பார். கொல்லைப் புறமாக ஓடுவார், அல்லது சன்னல் வழியாக ஏறிக் குதித்து விடுவார்.

லால் பகதூர் சாஸ்திரி எடுக்கிற மந்திரி இலாகாக்களில் ஏதாவது நெருக்கடிகள் வந்தபடி தான் இருக்கின்றன. அவர் "இந்த இலாகா வேண்டாம், தொல்லை!" என நினைத்து மற்றொரு இலாகாவுக்குப் போனால், அங்கும் நெருக்கடிகள் வந்து விடுகின்றன. லால் பகதூருக்கும் நெருக்கடிகளுக்கும் ஏதோ நெருங்கிய பந்தம்-பாசம் இருப்பது போல் தெரிகிறது. இல்லையென்றால், அவரைத் தொடர்ந்து நெருக்கடிகள் ஏன் வர வேண்டும்? அவர் இரயில்வே மந்திரியாக இருந்த பொழுது, விபத்துகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. சான்கான், மகபூப் நகர், அரியலூர்-இந்திய இரயில்வே வரலாற்றில் பெரிய விபத்துக்களென எழுதப்பட வேண்டியவைகளெல்லாம் அவர் அதிகாரத்தின் கீழ் நிகழ்ந்தன. பேச்சுகள் கண்டனங்கள் எழுந்தன, இரயில்வே இலாகாவில் எவ்வளவு தொல்லைகள் என்று, அந்த இலாகாவை மற்றொருவருக்குக் கொடுத்துவிட்டு புதிய மந்திரி சபை அமைக்கப்பட்ட பொழுது தபால்-தந்தி இலாகாவைப் பிடித்துக் கொண்டார். இந்த மகானுபவர் வந்ததும், தபால்-தந்தி உழியர்களின் வேலை நிறுத்தம் பற்றிய நெருக்கடி தோன்ற ஆரம்பித்தது.

நெருக்கடிகள் வந்து கதவைத் தட்டுகிற வரை பேசாமல் இருந்து விட்டு பின் கொல்லைப் புறமாக நழுவி விடுவது, அல்லது, சன்னல் வழியாக வெளியே வந்து விடுவது என்று முதலில் குறிப்பிட்டபடி, இரயில்வே விபத்துகள் உண்டான பொழுது, கொல்லைப் புறமாக நழுவி விட்டார். அதாவது அரியலூர் விபத்துக்குப் பின், கண்டனத்தையும் பழியையும் தாங்க முடியாமல், மந்திரி சபையை விட்டு மெதுவாக இராஜிநாமா செய்து கொண்டார். இராஜிநாமா செய்தது உண்மையில் விவேகமான செயல் தான்! அரியலூர் விபத்துக்குப் பின் லால் பகதூர் சாஸ்திரி இராஜிநாமா செய்தார், அவருக்குக்குக் கீழ் உதவி மந்திரியாக இருந்த ஓ. வி. அளகேசன் இராஜிநாமா செய்யாமல் பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தார். பின்னால் என்ன ஆயிற்று? பொதுத் தேர்தலில் லால் பகதூர் வெற்றி பெற்றார், புதிய மந்திரியாகி விட்டார். அளகேசன் தேர்தலில் தோல்வி கண்டார், பதவி எதையும் இதுவரையில் காணமல் இருக்கிறார்! இதில் லால் பகதூர் புத்திசாலித்தனமாகத் தானே நடந்துகொண்டு விட்டார். அவ்வளவுக்கும் மந்திரி பதவியை விட்டு அதிக நாட்களுக்குலால் பகதூர் இருக்கவுமில்லை. அரியலூர் விபத்து நடந்தது, 1956 நவம்பர் மாதத்தில்! பொதுத் தேர்தல் 1957 மார்ச்சு மாதத்தில்! புத்திசாலியான லால் பகதூர் ஐந்து மாதங்களுக்கு விலகியிருந்தார், பின் ஐந்து ஆண்டுகளுக்கு மந்திரி பதவியடைந்தார்! மற்றவர் இருக்கிறாரே அளகேசன், ஐந்து மாதங்களுக்கு மந்திரி பதவியில்-அதிலும் உதவி மந்திரி பதவியில் இருந்தார், பின் பாராளு மன்றம் பக்கம்போகும் வாய்ப்பையே இழந்தார்! நெருக்கடி வருகிற நேரத்தில் நழுவும் வித்தை, லால் பகதூர் சாஸ்திரிக்கு நன்றாகத் தெரியும். இரயில்வேவிபத்தின் போது கொல்லை வழியாக வெளியேறினார், தபால்-தந்தி வேலை நிறுத்தம் பயமுறுத்திய பொழுது சன்னல் வழியாக வெளியே வந்து வரவேற்பு தந்து விட்டார். எப்படியோ நெருக்கடியைச் சமாளித்து விடுகிறார்!

பொதுவாக காங்கிரசு மந்திரிகளும் மத்திய அரசாங்கமும், ஒரு நெருக்கடி தோன்றினால், அதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்கிறார்களே தவிர, அதை எப்படித் தீர்ப்பது என்பதில் கவனஞ்செலுத்துவதில்லை. சமாளிப்பதற்கும் தீர்ப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. சமாளிப்பது தற்காலிகமாகச் செய்துகொள்கிற ஏற்பாடு; தீர்ப்பது என்பது, அதற்கு ஒரு தெளிவான முடிவைக் காண்பது. தபால்-தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்த நெருக்கடியை மத்திய அரசாங்கத்தினர் ஒருவாறாக சமாளித்திருக்கிறார்கள், ஆனால் இன்னும் தீர்க்கவில்லை.

மந்திரிசபைக்கு உண்மையிலேயே விவேகமிருந்தால், நெருக்கடி ஒன்று தோன்றியபிறகு அதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்கிறார்களே தவிர நெருக்கடிகள் உண்டாகாமல் தடுக்கவழி செய்வதில்லை. தபால்-தந்தி ஊழியர்கள் தரும் கோரிக்கைகள் இன்று நேற்று உண்டானவையல்ல, கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக அவர்கள் தெரிவித்தபடிதான் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது வேலை நிறுத்தத்தைத் துவக்க அவர்கள் தருகின்ற காரணங்களை இரண்டரை ஆண்டுகாலமாக தந்திருக்கிறார்கள். ஊழியர்கள் அனுப்பிய மனுக்களுக்கு பதில் கிடையாது. அவர்கள் கெஞ்சிக்கேட்ட நேரத்திலெல்லாம் அலட்சியப் போக்குடன் அரசாங்கம் நடந்து வந்திருக்கிறது. அவர்கள் மிஞ்சிப்போய் கடைசியாக வேலை நிறுத்தம் என்று அணிவகுக்க ஆரம்பித்ததும்தான் அரசாங்கம் விழித்தெழுந்து, "என்னவேண்டும், ஏதுவேண்டும்?" என அமைதி காண விரும்புகிறது, சம்பளக் குழு நியமித்துச் சமரசம் பேச முன்வருகிறது. இப்பொழுது செய்தவைகளை முன்கூட்டியே செய்திருந்தால், வேலை நிறுத்தம் உண்டாவதற்கான சூழ்நிலை உருவாகியிருக்காது. சம்பளக்குழு அமைப்பது பற்றி இரண்டரை ஆண்டுகாலமாக ஊழியர்கள் கூக்குரல் போட்ட பொழுதெல்லாம் கவனிக்காமலிருந்த அரசாங்கம், வேலை நிறுத்தம் என்றதும்தான் கவனித்தது. ஆக நெருக்கடிகள் உருவாவதை ஆரம்பத்திலேயேத் தீர்க்க அரசாங்கம் முயல்வதில்லை. கடைசிநேரத்தில் சமாளிப்பதால் மட்டும் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறது.

வேலை நிறுத்தத்தைத் தடுப்பதற்காக சில உறுதி மொழிகளை அரசாங்கம் தந்திருக்கிறது. அந்த உறுதி மொழிகளின் நம்பிக்கையின் பேரி
ஊழியர்கள் வேலை நிறுத்
தைக் கைவிட்டிருக்கிறார்க
கொடுத்த உறுதி மொழிக
அரசாங்கம் காப்பாற்றவே
டும். அப்படியின்றி எப்படியோ
இப்பொழுது சமாளித்து வி
டோம் என்று பழைய அல
சியத்துடன் இருந்தால், மீ
டும் ஒரு வேலை நிறுத்தம் ஏ
படவேண்டிய நிலை பிறக்கு
அப்பொழுறு அரசாங்கத்தி
உறுதிமொழிகள் எதுவு
பயன்படாது,

தபால்-தந்தி ஊழியர்க
வேலை நிறுத்தம் செய்ய மு
வந்த காரணத்தால், அவ
களுடைய குறைகளைக் க
னிக்க அரசாங்கம் ஆரம்பி
திருக்கிறது. மத்திய அரசா
கத்திலும், மாநில அரசாங்க
திலும் பணிபுரியும் மற்ற ஊ
யர்களுக்கும் பலவிதக் குறை
பாடுகள் இருக்கின்றன. வே
நிறுத்தம் என்ற நெருக்கடி
அவர்களைத் தள்ளாமல், அ
சாங்கம் முன் கூட்டியே அ
சாங்க ஊழியர்கள் அனைவரு
கும் நீதி வழங்க முற்படவே
டும்.

அரசாங்க ஊழியர்களி
கோரிக்கைகளைக் கவனிக்கு
பொழுது, முதலாளி-தொ
லாளி என்ற மனோபாவ
துடன் அரசாங்கம் அவற்றை
கவனிக்கிறது. சமதர்ம அடி
படையில் இயங்க விரும்பு
அரசாங்கம் அத்தகை
போக்கைக் கைக்கொள்ள
கூடாது. முதலாளிக்கு இலா
நோக்கம் முக்கியமானது. ச
தர்ம அரசாங்கத்துக்கு பொ
நலம்தான் முக்கியமான குறி
கோள். பொதுநல அடிப்படை
யில் கவனித்திருந்தால், வி
வாசிகளின் ஏற்றம்-ஏல
களின் மீது சுமத்தப்படும் வ
பளு இவைகளை அரசாங்
தடுத்திருக்கலாம். முதல
மனப்பான்மையில் ஊறியி
கிற காரணத்தால், வே
நிறுத்தம் என்ற பேச்சுக் கி
பியபொழுது அதை அடக்க
சட்டங்கள் போடத்தா
மனம் செல்கிறது. வேலை நி
தம் செய்பவர்களை அடக்க
சட்டம் போட்டால் போதா
வேலை நிறுத்தத்தை உண்ட
கும் காரணங்கள் வாரம
பாதுகாக்கச் சட்டங்க
போடவேண்டும். அது தா
நிலையான-நாட்டுக்கு நன்
பயக்கும் அமைதியை உ
டாக்கும். அடக்கு முறையா
உண்டாகும் அமைதி நீண்
நாட்களுக்கு நீடிப்பதில்லை!

…கதை

நிறைவு

"எழில்"

…ந்திரிகா:

நான் பிறந்த அன்றே என் …ாய் இறந்தாள். நான் தாய் …ந்தாலும் அன்பிற்கு குறை …ல்லாமல் என் தந்தையால் …ளர்க்கப்பட்டேன். என் தந்…த உண்மையிலே என்மீது …ளவுகடந்த அன்பு கொண்…ருந்தார். அவர் அன்பின் …குதி என் தாய் இல்லாத …ால்தான் என்பது நான் சில …மயங்களில் உணர்வதுண்டு, …ருந்தும், சில சமயங்களில் தா…ல்லாக் குறையை உணர்ந்து …ன் உள்ளம் சஞ்சலப்படும்.

நான் பிறந்தேன் — வளர்ந்…தன். மாதங்கள் மறைந்து …ல ஆண்டுகள் விரைந்தோ…ன. நான் கல்லூரியில் படிக்…ம்போதுத்தான், ஏன் பிறந்…தாம் — ஏன் வளர்ந்தோம் …ன்ற நினைவுகள் என் உள்ளத்…ல் எழலாயின.

எனக்கு அப்பொழுது வயது …தினேழு இருக்கும். நான் கல்…ரியில் படித்துக்கொண்டிருந்…தன். நான் படித்த கல்லூரி…ல் ஆண்களும், பெண்களும் …சர்ந்து படித்து வந்தனர். …சந்தன்—என் வகுப்பு மாண…ர்களில்ஒருவன். அவன் இர…ாயன பாடத்தில் சற்று மந்…மொழிய மற்றப் பாடங்களில் …ர்மையான அறிவுடையவன். …பாதுவாக, அவன் பௌதீ…த்தில் சிறந்தும், இரசா…னப் பாடத்தில் போதியகவ…ம் செலுத்தாமலும் இருந்…ான் என்பதே என் எண்ணம். …வன் என்றும் இரசாயனப் …ரிசோதனை வகுப்புகளில் …ான் எழுதுவதையே பார்த்து …ழுதிவிடுவான். ஆனால் பௌ…க பரிசோதனை வகுப்பு நேரங்…ளில் நான், என்விடைகளையும் …டிவுகளையும் அவனைப் பார்த்…த்தான் திருத்திக்கொள்…து வழக்கம். இதற்கு கார…ம் எங்களுக்குரிய இடங்கள் …டுத்தடுத்து இருந்ததுதான். …ாங்கள் இந்தப் பரிசோதனை …குப்பு நேரங்களில் பேசுவதை …விற வேறு எந்த நேரத்தி…ும் பேசுவதே இல்லை. வசந்…ன குறித்த நேரத்தில் வருவ…ும் வகுப்பு நேரங்கள் முடிந்த…ும் கல்லூரியைவிட்டு செல்லு…தையும் காணும்போதெல்…ாம், அவன் 'நல்லவன்' …ன்ற எண்ணம்தான் எனக்…த் தோன்றும். பொதுவாக …வன யாரிடமும் அதிகமாகப் …பசமாட்டான்.

ஒருநாள் என் வகுப்பிலுள்ள …லர் செஞ்சிக் கோட்டைக்…ச் செல்ல திட்டமிட்டார்கள். …சஞ்சிக்கோட்டையை காணச் …செல்ல அமைந்த குழுவில் நான், வசந்தன், என் தோழிகள் இருவர் உள்பட பத்துப் பேர் இருந்தோம். அன்று, நான் மாணவர்களுடன் செஞ்சிக் கோட்டைக்குச் செல்ல துணிந்ததற்கு காரணம் என்னுடைய தோழிகள் இருவரும் ஆண்களின் துடுக்கான பேச்சிற்கு சிறந்த முறையில் பதில் உரைக்கும் தன்மையில் கை தேர்ந்தவர்களாக இருந்ததால் தான். அதுவுமின்றி, எங்கள் குழு வசந்தனது முழுப் பொறுப்பில் அமைந்ததும் ஆகும். எழும்பூர் நிலையத்தை விட்டு புகைவண்டி புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம், மாணவர்கள் தங்களுக்குரிய முறையில் பேச தொடங்கிவிட்டார்கள். ஒருமாணவன், "நம் குழுவில் பெண்கள் இருப்பதால் நமக்கு அறுசுவை உணவு தயாரிப்பார்களா?" என்ற கேள்வியை எழுப்பினான். என் அருகில் அமர்ந்திருந்தி அல்லி, "நாங்கள் உணவு தயாரிப்போம், ஆனால் உங்களால் அவ்வுணவை உண்ண முடியுமா?" என்று கேட்டாள்.

மாணவர்களின் சிரிப்புக்கிடையில், "உங்களுக்கு கல்லூரியில் சமைக்கக் கற்றுக் கொடுக்கிறார்களா?" என்ற கேள்வி எழுந்தது. "சமைக்க கல்லூரிப்பாடம் ஆண்களுக்குத்தான் அவசியம்" என்று அல்லி விடையிறுத்தாள்.

"உங்கள் விவாதம் எல்லாம் கல்லூரி மேடையில் வைத்துக் கொள்ளலாம்" என்று கூறிக் கொண்டே வசந்தன் வண்டியின் வாயிற்புறத்திலிருந்து உள்ளே வந்தான். அவன் பையிலிருந்த சீட்டுக்கட்டை எடுத்து சீட்டு ஆட்டத்தை தொடங்கினான். ஆட்டத்தில் பங்கு கொள்ளாதவர்கள் ஆட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தனர்.

நாங்கள் மூவரும், நாங்கள் கொண்டுவந்த கதைப் புத்தகங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோமே ஒழிய வேறு ஒரு கதையும் படிக்கவில்லை. வண்டி திண்டிவனத்தை அடைந்தது. நாங்கள் எல்லோரும் வண்டியைவிட்டு வெளிவந்தோம். திண்டிவனத்தில் காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு நாங்கள் பஸ் ஏறி செஞ்சியை அடைந்தோம். அன்று மாலை ஞாயிறு அடிவாரத்தில் இருக்கும்போது, நாங்கள் மலையின் உச்சியியில் உள்ள இரங்கநாதன் கோயிலுக்கருகில் இளைப்பாறிக் கொண்டிருந்தோம். அச்சமயம், வசந்தன் அக்கோயிலின் பின் புறத்திலிருந்த பாறையின்மீது நின்றுகொண்டுசுற்றுப்புறத்தோற்றங்களைப் பல கோணங்களில் படம் எடுத்துக்கொண்டிருந்தான். எங்களில் ஒரு மாணவன், அங்கு அருகில் ஒரு சுனை யிருப்பதாகவும் அதன் நீர் இனிப்பதாகவும் கூறினான். இளைப்பாறிக் கொண்டிருந்த நாங்கள் எல்லோரும் சுனையின் நீரை சுவைக்க கிளம்பினோம். எல்லோருடனும் இரண்டடி தூரம் சென்ற எனக்கு வசந்தனை கூப்பிடவேண்டும் போலிருந்தது. சற்று பின் தங்கினேன். மற்றவர்கள் என்னைக் கவனிக்காமல் மேலே சென்றுகொண்டிருந்தனர். நான் திரும்பி வசந்தனை நோக்கி நடந்தேன். நான் அவனை நெருங்கி, "எல்லோரும் சுனையின் நீரை சுவைக்கச் செல்கிறார்கள்" என்று சொல்லி முடிவில்லாத கதையைப்போல் நிறுத்தினேன்.

என் பக்கம் திரும்பிய வசந்தன், "ஓ, நீங்களா இந்தப் பக்கம் வாருங்கள். மலை அடிவாரத்தின் பசுமையான வயல்கள் எவ்வித வனப்புடன் தோன்றுகிறது பாருங்கள்." என்று கூறினான். சற்று முன் சென்று மலை அடிவாரத்தின் அமைப்பை மலையின் உச்சியிலிருந்து நோக்கினேன். அடிவாரத்தின் வனப்பு கம்பீரமாகத்தான் இருந்தது. அதேசமயத்தில் நான் அதிக உயரத்திலிருந்து கீழ் நிலத்தைப் பார்த்ததால் என் தலை சுற்றுவது போல் எனக்கு உணர்வுதோன்றிற்று. "எனக்குத் தலைசுற்றுகிறது. வாருங்கள், போகலாம்" என்றேன்.

நாங்கள் இருவரும் சுனையை நோக்கி திரும்பி நடக்கலானோம். சிறிது நேர அமைதிக்குப் பிறகு, "ஏன் மற்றவர்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு தோன்றிற்று" என்ற வசந்தனின் கூற்று என் செவியில் விழுந்தது.

"எல்லோரும் செல்கிறார்கள், உங்களையும் கூப்பிடலாம் என்று கூப்பிட்டேன்" என்றேன். அதே சமயத்தில், எனது உள்ளுணர்வு என்னை தலையைக் குனிந்து நடக்கச் செய்தது. தலை குனிந்து நடந்தும், பாறைகள் ஒரே சமதளத்தில் இல்லாததால் ஒரு பாறையின் மீது ஏறும்போது என் காலில் சேலை சிக்க என் கால்கள் இடறின. ஆனால், திடிரென்று வசந்தன் என் கையைப் பிடித்துக்கொண்டான். "பார்த்து நடவுங்கள்" என்றுச் சொல்லிக் கொண்டே என் கையை விட்டான். என் உடலெல்லாம் ஒரு வித உணர்ச்சி தூண்டல் உண்டாயிற்று. வசந்தனை விட்டு சற்று விலகி மிக்க கவனிப்புடன் நடக்கலானேன். நாங்கள் சுனையை அடைந்த போது மற்றவர்களும் அங்கு இருந்தார்கள். அப்பொழுதுதான் என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று அஞ்சினேன். எல்லோருக்கும் மத்தியில் யாராவது ஏதாவது பரிகாசம் செய்வார்களோஎன்றுஎண்ணி என் நெஞ்சம் துணுக்குற்றது. ஆனால்,அங்குஎல்லோரும்சுனையின்நீரைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்களே ஒழிய எங்களை கவனித்ததாக தெரியவில்லை. நானும் சற்று அமைதி அடைந்தேன். நான் சுனையின் தண்ணீரை அருந்தலானேன். ஆனால் அதன் சுவையை உணரும் நிலையில் அப்பொழுது நானில்லை. மற்றவர்கள் வசந்தனை நீரின் சுவையைப் பற்றி கேட்கும்போது "நன்றாகத்தான் இருக்கிறது. கீழே போகலாம், பொழுது சாயும் நேரம் ஆகப்போகிறது" என்றான். வசந்தன் நாங்கள் எல்லோரும் கீழே இறங்கி வந்துக் கொண்டிருந்தபோது, "ஏன் சந்திரிகா உனக்கு வசந்தன மீது அவ்வளவு அக்கறை" என்று மற்றவர்கள் அறியா வண்ணம் அல்லி என்னைக் கேட்டாள்.

"எனக்கு ஒன்றும் தனி அக்கறை இல்லை, எல்லோரும் செல்கிறார்களே என்று தான் ……" என்று இழுத்தேன் நான். அதற்கு அவள், "எல்லாம் தெரியும்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். அப்போது தான், நான் வசந்தனை அழைக்கச் சென்றதை அல்லி கவனித்து விட்டாள் என்று உணரலானேன்.

நாங்கள் எல்லோரும் கீழே இறங்கி வந்தோம். அன்றிரவே நாங்கள் செஞ்சியிலிருந்து திரும்பினோம். செஞ்சியிலிருந்து திரும்பியதிலிருந்து என் தோழி, அல்லி என்னையும் வசந்தனையும் தொடர்பு படித்தி கேலி செய்வதையே தொழிலாகக் கொண்டு விட்டாள். அவளது நாவை எவ்வாறு அடக்குவது என்று எனக்கே புரியவில்லை. என் நினைவும் எப்பொழுதும் வசந்தனைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது. 'நான், ஏன் அவனை மணந்துக் கொள்ளக் கூடாது' என்ற எண்ணம் என் உள்ளத்தில் அடிக்கடி எழலாயிற்று. வசந்தன் தொலைவில் செல்லும்போதெல் அவனைக் கூப்பிட்டு என் உள்ளக் கிடக்கையை கூறவேண்டும்போல் தோன்றும். ஆனால் அவன் அருகில் செல்லும் போது என்னையறியாமல் என் தலை கீழே குனிந்து விடும்.

செஞ்சியிலிருந்து திரும்பிய இரண்டாம் நாள் எங்களுக்கு இரசாயனப் பரிசோதனை வகுப்பு இருந்தது. வழக்கம் போல் வசந்தன் ஏதோ பரிசோதனைகளைச் செய்து கொண்டிருந்தான். ஆனால் நான் ஒரு பரிசோதனை முடித்து அடுத்தது செய்யும் போது அவன் என் புத்தகத்தில் நான் எழுதிய வற்றையே 'காப்பி' அடித்துக் கொண்டிருந்தான். நான் கவனித்தும் கவனிக்காதவள் போல் இருந்தேன். எல்லாப் பரிசோதனைகளையும் முடித்து

விட்டு வெளியே செல்வதற்கு தயாரானேன். வசந்தன் எல்லாம் எழுதி முடித்துவிட்டு என்புத்தகத்தின்மீது வைத்திருந்த அவனது கையை எடுத்தான். நான் என் புத்தகத்தை மூடினேன். திடீரென்று வசந்தன் சில புகைபடங்களை என் புத்தகத்தின் மீது வைத்தான்.

"இவைகளை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இவைகள் எல்லாம் செஞ்சியில் எடுக்கப்பட்டவை" என்ற வசந்தனது கூற்றுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் சில விநாடிகள் பேசாமல் இருந்தேன். சில விநாடிகள் தாமதத்திற்கு பிறகு எல்லாப் புகைப்படங்களையும் என் புத்தகத்தில் வைத்துக் கொண்டு பேசாமல் கிளம்பினேன். வசந்தன் எனக்குப் புகைப் படங்கள் கொடுத்ததிலிருந்து என்னிடம் அவனுக்கு ஓரளவு அன்பு இருக்கிறது என்று உணரலானேன். அன்றைய தினத்திலிருந்து நான் வசந்தனைப் பற்றியும் என்னுடைய எதிர் கால வாழ்வைப் பற்றியும் பல கனவுகள் காணலானேன். ஒவ்வொரு நாளும் நான் வீட்டிலிருந்து கல்லூரிக்கு கிளம்பும் போதெல்லாம் இன்று எப்படியாவது வசந்தனிடம் என் உள்ளக் கிடக்கையை வெளியிட்டு விடுவது என்ற முடிவுடன் கிளம்புவேன். நான் கல்லூரிக்கு வரும் வழியெல்லாம் என் பேச்சை வசந்தனிடம் எப்படி ஆரம்பிப்பது, எப்படி முடித்துக் கொள்வது என்று எண்ணிக் கொண்டே வருவேன். ஆனால் நான் வசந்தனைப் பார்க்கும்போது மட்டும் எனக்கு பேசுவதற்கு துணிவு வருவதில்லை. இவ்வாறு பல நாட்கள் உருண்டோடின. நாட்கள் செல்ல செல்ல என் இதயத்தின் மேல் பல பாறைகள் அழுத்திக் கொண்டிருப்பது போல் உணர்வு ஏற்படலாயிற்று.

'ஏன் பிறந்தோம் - ஏன் வளர்ந்தோம், என்ற வினாக்கள் என் உள்ளத்தில் எழலாயின. என்றும் குழந்தையாகவே இருந்தால் எவ்வளவு அமைதியுடன் இருக்கலாம் என்று நினைத்துப் பார்க்கலானேன்.

கல்லூரி முடிவதற்கு இரண்டு மாதங்கள்தான் இருந்தன. வசந்தன் அடிக்கடி வகுப்பிற்கு வராமல் இருந்தான். அவன் வகுப்பிற்கு வராத நாட்களில் என் இதயத்தில் விவரிக்க முடியாத ஒருவித சோர்வு ஏற்படும். அவன் வராத நாட்களில் அல்லியின் ஏளனப் பேச்சும் அதிகரித்தது. அவளுக்கு நயமாகவும், கோபமாகாகவும் எடுத்துக் கூறியும், அவள் என்னையும் வசந்தனையும் தொடர்புபடுத்தி கேலி செய்வதை விடவில்லை. ஒருநாள், அன்றும் இரசாயனப் பரிசோதனை வகுப்பு நேரம்தான். வசந்தன் என் இடத்திற்கு வந்ததும், "நீங்கள் இவ்வகுப்பு நேரங்களில் இவ்வளவு நாட்களாக பேருதவியாக இருந்ததற்கு என் நன்றி. நான், நாளைக்கு பம்பாய்க்குச் செல்கிறேன். அங்கு நான் வானொலி அதிகாரியாக ஆவதற்குரிய தேர்வு எழுதப்போகிறேன்" என்று அவன் என்னிடம் கூறினான். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சற்று நேர அமைதிக்குப் பிறகு "ஏன், இவ்வாண்டு முடிந்த பிறகு போகக்கூடாதா?" என்ற சொற்கள் என்னையும் அறியாமல் என் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டன.

"இல்லை, பம்பாய் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டேன். நாளை இரவே நான் செல்கிறேன்," என்று வசந்தன் கூறினான்.

"செய்யுங்கள்" என்றேன் நான்.

"நண்பன் என்ற முறையில் உங்கள் எதிர்கால நல்வாழ்விற்கு என் இதயங்கனிந்த நல்வாழ்த்துகள்" என்று கூறிவிட்டு, வசந்தன் என்னிடம் விடைபெற்றுச் சென்றான்.

வசந்தன் சென்றதிலிருந்து நான் உணர்ச்சியற்ற ஒரு இயந்திரம்போல் இயங்கலானேன். என் செய்கைகள் எல்லாம் பொழுது போக்கிற்காகவே அமைந்துவிட்டன. என் உள்ளம் அமைதியற்று எங்கெங்கோ அலைந்தது. என் படிப்பறிவாவது என்னை அமைதியுடன் வாழவைக்காதா என்று ஏங்கலானேன்.

வசந்தன்

நான் என் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கும் தருவாயிலேயே என் வாழ்க்கையை வெறுக்கத் தொடங்கினேன். இதற்கு முக்கிய காரணம், நான் எங்கள் குடும்ப அமைப்பை முழுவவதும் வெறுத்ததுதான். எங்களிடம் செல்வம் ஓரளவு அதிகமாகவே இருந்தது. அதற்கேற்றாற் போல் எங்களிடத்தில் சச்சரவுகள் மிகுந்திருந்தன. ஒவ்வொரு நாளும் எங்கள் குடும்பத்தில் பல சச்சரவுகள் ஏற்படும். இச்சச்சரவுகளைக் காணும் போதெல்லாம், நான் குடும்பம் என்றால் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கலானேன். குடும்பத்தில் மட்டுமின்றி உலகிலும் ஒவ்வொருவரும் மற்றவர்களை நன்கு புரிந்து கொண்டால்தான் அமைதியுடன் வாழமுடியும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. ஒருவன் அமைதியுடன் வாழமுடியுமென்றால் அவனுக்கு இயற்கையிலேயே ஓரளவு சகிப்புத் தன்மை அமைந்திருக்கவேண்டும் என்பதை உணரலானேன், நான் முடிந்த வரையில் அமைதியுடன் வாழத்தான் முயற்சித்தேன்.

என் கல்லூரி வாழ்க்கையில் நான் சந்திரிகாவைப் பார்த்த பிறகுதான் படித்த பெண்களும் அச்சம், நாணம் கலந்த பெண்களாக வாழ்வார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. அவளுடைய அடக்கமான சுபாவமே என்னைப் பெரிதும் கவர்ந்தது. என் வாழ்நாட்களில் பல அவள் நினைவிலேயே கழிந்தன. "அடக்கமான பெண், நாணம் மிகுந்தவள்" இவையே என் இதயத்தில் ஒலித்துக்கொண்டிருப்பவை. சில நேரங்களில் அவளை என் வாழ்க்கைத்துணைவியாக ஆக்கிக்கொள்ளவும் ஆசைப்பட்டேன். ஆனால், எங்கள் குடும்பத்தில் அவளால் அமைதியாக வாழமுடியாது என்பதுதான் என் எண்ணம். தந்தையின் அன்பும் தன் பாடப்புத்தகங்களைத் தவிர வேறொன்றும் இவ்வுலகத்தில் அறியாத அவளை சச்சரவுகள் நிறைந்த எங்கள் குடும்பத்திற்கு கொண்டுவர நான் விரும்பவில்லை. ஆனால் என் நினைவு மட்டும் அவளைவிட்டு என்றும் அகல்வில்லை. நாளுக்கு நாள் என் உள்ளத்தில் அவள் மீது அன்பு வளரலாயிற்று. அவள் வாழ்க்கை இன்பகரமானதாக அமையவேண்டும் என்று எண்ணலானேன். நான் சந்திரிகாவைப் பார்க்கும் போதெல்லாம் எதுவும் அவசியமற்ற முறையில் பேசுவது கூடாது, அது அவள் வாழ்க்கையையே பாழ் செய்தாலும் செய்துவிடும் என்று முன் அறிவிப்பாக இருந்தேன். இதில் ஓரளவு வெற்றியும் பெற்றேன்.

என் கல்லூரிப் படிப்பை முழுவதும் முடிக்காமல் நான் இடையில் பம்பாய் செல்ல நேர்ந்ததைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால் நான் சந்திரிகாவைப் பார்க்காமல் இருக்கவேண்டி நேர்ந்ததைப்பற்றி நினைக்கும்போதுதான் என் மனம் நிலைக்கொள்ளவில்லை. என்னால் அவளுடன் பேசாமல் இருக்க முடிந்தது. ஆனால் அவளைப் பார்க்காமல் இருப்பது என்பது கடினமானதாகத்தான் எனக்குத் தோன்றியது. பல மாதங்களுக்குப் பிறகு நான் சந்திரிகாவைப் பார்க்காமலும் அமைதியாக இருக்க பழகிக்கொண்டேன். எனக்கு பம்பாயிலேயே வேலை கிடைத்தது. நான் முடிந்தவரையில் அமைதியாகத்தான் வாழ்கிறேன். ஆனால் என் சந்திரிகாவின் நினைவுமட்டும் என் உள்ளத்தை விட்டு அகலவில்லை.

சந்திரிகா

வசந்தன் பம்பாய் சென்ற பிறகு எனக்கு 'ஏன் வாழ வேண்டும்' என்னும் எண்ணம் தோன்றலாயிற்று. எனக்குச் சாகவும் துணிவுவரவில்லை, வாழவும் விருப்பம் இல்லை. நாட்கள் நகர்ந்தன. என் தந்தை எனக்கு திருமணம் செய்வதில் தீவிரமாக இருந்தார். எனக்கு திருமணம் செய்துக் கொள்ள விருப்ப மில்லை என்று நான் அவரிடம் கூறினேன். இதை கேட்டதும் என் தந்தை என் எதிரிலேயே அழ ஆரம்பித்து விட்டார்.

"உன்னை இவ்வளவு நாளாக வளர்த்தது இதற்குத் தானா, சந்திரிகா?" என்று கேட்ட என் தந்தைக்கு என்ன பதில் கூறுவது என்றே புரியவில்லை.

"படித்த உனக்கு நான் என்ன சொல்வது. என் ஒரே ஆசை உன்னை மணக்கோலத்தில் பார்ப்பது தான், சந்திரிகா" என்னும் என் தந்தையின் சொற்கள் என் உள்ளத்தை பெரிதும் தாக்கின. இவ்வளவு நாள் என்னை அன்புடன் வளர்த்த அவரது ஒரே ஆசையை நான் எவ்வாறேனும் நிறைவேற்றத்தான் வேண்டும் என்னும் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எழலாயிற்று.

"எவ்வாறேனும் வசந்தனை மறந்து புதிய வாழ்வை தொடங்குவது தான் அறிவுடையதற்கு அழகு" என்று எனது ஒரு உள்ளம் கூறிற்று.

"உன் உள்ளுணர்வை அழித்து, எவ்வாறு நீ வாழ முடியும்?" என்று எனது மற்றொரு உள்ளம் என்னை ஏளனம் செய்தது.

நான் படித்தவள், பட்டம் பெற்றவள், என்னால் புதுப் பாதையில் வாழ்க்கையைச் செலுத்த முடியும் என்ற உணர்வு ஏற்பட்டது. நான்

தூர தேசத்திற்குப் போயிருந்த ஒருவர், ஒரு விருந்தில் பலர் வேண்டுகோளுக்கு இணங்க பாட்டுக்களைப் பாடினார்; கடைசியாகத் தன் தாய்நாட்டைக் குறித்து ஒரு பாட்டுப் பாடினார். பாட்டை நிறுத்திச் சுற்றிப் பார்த்தார். மூலையில் உட்கார்ந்திருந்த ஒருவர் கன்னத்தில் கண்ணீர் வடிவது தெரிந்தது.

தான் பாடிய பாட்டு அவரை உருக்கி விட்டது அறிந்த பாட்டுப் பாடியவர் அவர் அருகில் சென்று "பாவம்! நீங்களும் எனது நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்களா? எனது ஊரை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

உட்கார்ந்திருந்தவர் கண்களைத் துடைத்துக் கொண்டு, "இல்லை, உங்கள் ஊரைத் தெரியாது, ஆனால் இசையைப்பற்றிக் கொஞ்சம் தெரியும்" என்றார்!

ஏன் தந்தைக்கு அவர் தேர்ந்தெடுக்கும் மணளனையே மணப்பதாக வாக்களித்துவிட்டேன். அவர் உள்ளத்தில் ஏற்பட்ட நிறைவு அவர் முகத்தில் மிளிரக் கண்டேன். என் தந்தையையாவது திருப்தி செய்ய முடிந்ததே என்று எண்ணி நானும்ஓரளவு நிறைவு பெற்றேன்.

கமலபதி

நான் சந்திரிகாவை மணந்து நான்குஆண்டுகள் ஆகின்றன. இந்நான்கு ஆண்டுகளில் எங்களுக்குள் இதுவரையில் ஒரு சிறு மன வேற்றுமையும் ஏற்பட்டதில்லை. அவளது அமைதி நிறைந்த முகத்தை காணும் போதெல்லாம் அவளது உள்ளத்தில் ஏதோ குறைந்திருப்பதாகவே எனக்குத் தோன்றும். ஆனல் அவள் என்னுடன் அன்புடன் இருப்பதை உணரும்போது, நான் அவளுக்கு இயற்கையாகவே அமைதியைப் பிரதிபலிக்கும் முகம் அமைந்து விட்டது என்றே எண்ணுவேன். அவள் என்னிடத்தில் பேசும்போதெல்லாம் சிரித்துக் கொண்டேத் தான் பேசுவாள். அவ் அமைதி நிறைந்த முகத்தில் படரும் புன்சிரிப்பின் வனப்பில்தான் நான் என் வாழ்க்கையின் முழு நிறைவையும் கண்டேன்.

எங்களுக்கு இப்பொழுது ஒரு பெண் குழந்தை இருக்கிறது. சந்திரிகா குழந்தையுடன் கொஞ்சும் போதெல்லாம் அவள் மனைவி என்ற நிலையைவிட தாய் என்ற நிலைக்குத்தான் உரியவள் என்று எனக்குத் தோன்றும். என்னை அமெரிக்காவிற்கு அனுப்புவதற்கு நான் வேலை செய்யும் அலுவலகத்தார் முடிவு கட்டியபோது, நான் சந்திரிகாவையும் குழந்தையையும் பிரிந்து செல்ல வேண்டியதை எண்ணி மனங்கலங்கினேன். அதே நேரத்தில் நான் ஒரே ஆண்டில் திரும்பி வந்து விடுவேன் என்பதை மனதில் கொண்டு ஒருறு மன ஆறுதல் அடைந்தேன்.

நான் தமிழகத்தை விட்டுச் செல்ல ஒரு வாரம் தான் இருந்தன. நான் என் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் நான், சந்திரிகாவிற்கும் குழந்தை விமலா விற்கும் என்ன என்ன பொருள்களை அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும் போது கோண்டு வருவது என்பதைப் பற்றி சந்திரிகாவை கேட்டேன்.

"நீங்கள் அங்கிருந்து ஒன்றும் கொண்டுவரவேண்டாம். முக்கியமாக நீங்கள் ஒருகையில் மதுக்கோப்பையும் மற்றொரு கையில் புகைக்குடிக்கும் குழலையும் தாங்கிக் கொண்டு வராமல் இருந்தால் போதும்!" என்று விடையிறுத்தாள், சந்திரிகா.

நான் இத்தகைய பதிலை சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனல் நான் குறைந்தது, 1000 ரூபாய்க்காவது அவளிடமிருந்து பட்டியலை எதிர்பார்த்தேன். பெருத்த ஏமாற்றம் தான் கிடைத்தது. அதே சமயத்தில் நான் அங்கு மதுப் பழக்கத்தையும் புகைக் குடிக்கும் பழக்கத்தையும் கைக் கொள்வேன் என்று அவள் அஞ்சுகிருள் என்பதை உணர்ந்தேன். எவ்வித தீயப்பழக்கத்தையும் நான் என் வாழ்க்கையில் கைக்கொள்ளமாட்டேன் என்று உறுதிமொழி அளித்தேன்.

"குழந்தையை நீங்கள் எப்பொழுதும் மறக்காமல் இருந்தால் அதுவே போதும்" என்று அவள் கடைசியாக கூறினுள்.

சந்திரிகாவிற்கு குழந்தை பிறந்ததிலிருந்து உடல் பலம் குறைவானதால் தினம் தினம் மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவள் உடல் நலத்தையும், குழந்தையின் நலத்தையும் நன்கு கவனிப்பாக பாதுகாத்துக் கொள்ளும்படி அவளிடம் கூறினேன். அவளையும், குழந்தைவிமலாவையும் அவள் தந்தையிடம் ஒப்படைத்துவிட்டு வான ஊர்தியில் ஏறி உட்கார்ந்தேன். வான ஊர்தி என் தாயகத்தை விட்டு ஏதோ ஓர் திசையில் கிளம்பிற்று. என் நினைவுகளும் எங்கெங்கோ அலைந்துக் கொண்டிருந்தன.

சந்திரிகா:

ஒருவரை உள்ளத்தில் வைத்துக்கொண்டு மற்றொருவருடன் எவ்வாறு வாழ முடியும் என்று முதலில் அஞ்சினேன். வசந்தனை எவ்வாறேனும் மறந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதை நினைத்தபோது என் உடல் நடுக்கமுற்றது. என்னையும் மறந்து சில நேரங்களில் நானே அழுவதுமுண்டு. வசந்தனது கம்பீரமான முகத்தையும், அவனது அளந்துபேசும் பண்பையும் மறப்பது கடினமாகவே இருந்தது. ஆனல். என் திருமணம் நெருங்க நெருங்க நானே என் உள்ளத்தை உறுதியான முறையில் திருத்தி அமைத்துக்கொண்டேன். வசந்தன் கடைசியாக என்னிடம் விடைபெறும்போது கூறிய சொற்கள் என் உள்ளத்திலிருந்து என்றுமே அகலவில்லை. என் எதிர்கால நல்வாழ்விற்கு அவன் கூறிய அவனது இதய வாழ்த்துக்களே என் புதிய வாழ்க்கையை அமைக்க ஓரளவு உதவி செய்தது என்றல் மிகையாகாது. நான் அமைதியான நல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டால்தான் என் வசந்தனும் அமைதி கொள்வான் என்பது என் உள்ளத்தில் தோன்றிய வசந்தனைப் பற்றிய கடைசி முடிவு.

நான் புதிய வாழ்விற்கு தயாரானேன்! என்னை மணந்துகொள்ளும் மணாளரின் மனம் கோணுது அவருக்கு பணிபுரிந்து அவருடைய வாழ்க்கையில் முழுஅமைதியை நிலைநாட்டுவதே என் முதலாய கடமையாக முடிவுகட்டினேன். சிறந்த பண்புள்ளவரே எனக்கு கணவராக அமைந்தார். என் கடமையை உணர்ந்து நான் என் வாழ்க்கையில் வெற்றி பெற்றேன். நான் தனித்திருக்கும்போது எனக்குச் சில சமயங்களில் வசந்தனது நினைவுவரும். அச்சமயங்களில் நான் அமைதியாக வாழ்வது அறிந்தால் அவன் என்னை மிகவும்போற்றுவான் என்று எண்ணி ஆறுதல் அடைவேன். நான் குழந்தை பெற்ற பிறகு மிகவும் வலிவிழந்தவளாக ஆனேன். மிக்க கவனத்துடன் இல்லாவிட்டால் எனக்கு காசநோய் தொடர்ந்தாலும் தொடரும் என்று டாக்டர் என் கணவருடன் கூறியது என் காதில் விழுந்தது. ஆனல் இதை என் கணவர் என்னிடம் மறைத்தார். அவர் ஏதேதோ மருந்துகளை வாங்கிக் கொண்டு வரலானர். நான் இழந்த வலிவை சரி செய்வதற்கு அம்மருந்துகளை உட்கொள்ளும்படி அவர் வற்புறுத்தினர். அம்மருந்துகளையெல்லாம் தினம்தினம் அருந்தலானேன். நானும்என்குழந்தையின் பிற்கால நலங்கருதி மிக்க கவனிப்புடன் இருக்கலானேன். இந்த நிலையில்தான் என் கணவரும் அமெரிக்காவிற்கு கிளம்பினர். தினம் தினம் இரண்டு மூன்று மருந்துகளை உட்கொள்வதும் என் குழந்தை விமலாவுடன் கொஞ்சுவதுமே என் பொழுது போக்காகவும், வாழ்க்கையுமாக அமைந்தது.

வசந்தன்:

ஆண்டுகள் ஆறு எவ்வாறோ ஓடிவிட்டன. நான் என்றும் அமைதியாகத்தான் வாழ்கிறேன். சந்திரிகாவின் நினைவு எனக்கு அடிக்கடி வரும். "அவள் அறிவுடையவள்; தன் வாழ்க்கையை சிறந்த முறையில் அமைத்துக் கொண்டிருப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

ஒருநாள், காலைப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அதில் அமெரிக்காவிலிருந்து தமிழகத்திற்கு வந்துகொண்டிருந்த வான ஊர்தி வழியில் தீப்பற்றிக் கொண்டதாக செய்தி வந்திருந்தது. அவ்விபத்தில் இறந்தவர்களின் பட்டியலும் அவர்களைப்பற்றிய சில விபரங்களும் அப்பத்திரிகையில் கொடுக்கப் பட்டிருந்தன. அப்பட்டியலில் கமலபதி என்ற பெயரும் இருந்தது. விபத்தில் மடிந்த கபமபதி என் சந்திரிகாவின் கணவராக இருப்பாரோ என்ற அச்சம் கலந்த ஐயம் என் உள்ளத்தில் எழுந்தது. இதற்கு காரணம் நான்கல்லூரியில் படிக்கும்போது சந்திரிகா எங்குவசித்துவந்தாளோ அதே முகவரி அப்பத்திரிகையில் கொடுக்கப் பட்டிருந்ததுதான். நான் என் வேலையிலிருந்து விலகிக் கொண்டு தமிழகம் திரும்பினேன். சந்திரிகா வீட்டிற்குள் எவ்வாறு செல்வது என்பது எனக்குப் புரியவில்லை. அவளது வீட்டில் அவளைத் தவிற வேறுயாரும் எனக்கு அறிமுகம் இல்லை. பல மணி நேரச் சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தேன். அவள் வீட்டிற்குப்போய், பம்பாயில் உள்ள கமலபதியின் நண்பர் அவரைப் பார்த்து வரும்படி கூறியதாக அங்குள்ளவர்களைக் கேட்பது என்பதே என் முடிவு. அன்று மாலை சந்திரிகாவின் வீட்டு வாயிற்படியை அடைந்தபோது முன் கூடத்திலேயே அவள் சாய்வு நாற்காலியில் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவளது வெளுத்த முகத்தையும், மெலிந்த உடலையும் காணும் போது என்னுடைய நெஞ்சம பதறியது. என்னையும் மறந்து நான் மரம்போல் நிற்கலானேன் சிறிது நேரத்தில் உள்ளிருந்து வந்த வேலைக்காரி அங்கு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே உறங்கிக் கொண்டிருந்த சந்திரிகாவின் தலையை எழுப்பியபோதுதான் நான் சுயநினைவுக்கு வந்தேன்.

"கமலபதி இங்கு இருக்கிருரா?" என்று அவரைக் கேட்டேன்.

"யார்?" என்ற பதற்றத்துடன் கூடிய சந்திரிகாவின் குரல் என்னை திடுக்கிடச் செய்தது. "உங்கள் குரல் வசந்தனது போன்று இருக்கிறதே. நீங்கள் வசந்தன்தானு?" என்று கேட்ட அவளுக்கு, "ஆம் சந்திரிகா." என்ற சொற்களை என்னையும் மறந்த நிலையில் கூறினேன். "வசந்தன், நான் அமைதியுடன்தான் வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனல் என்வாழ்வில் இனி அமைதியே கிடையாது" என்ற சொற்கள் அவளது கண்ணீருக்கிடையில் வெளி வந்தன. பெண் பெற்றவரும் கண்ணீரும் மௌனமுமாக அங்கு அமர்ந்திருந்தார். நீண்டநேர அமைதிக்குப்பிறகு சந்திரிகாவின் தந்தை கமலபதியின் சோக முடிவைச் சொன்னர். தனக்கு ஒரு பெண் குழந்தை இருப்பதாகவும், தன்னைப் பிடித்திருக்கும் காசநோய் நாளுக்குநாள் அதிகமாவதும் சந்திரிகா கூறியபோது நான் மனம் கலங்கலானேன்.

"நான் இனி நீண்டநாட்கள் உயிருடன் இருக்கமாட்டேன்" என்று கூறிய சந்திரிகாவிற்கு அவள் மன அமைதியுடனும், மருத்துவர்கள் கொடுக்கும் மருந்தினை முறையாக உட்கொண்டாலும் நீண்ட நாட்கள் இருக்கலாம் என்று ஆறுதல் கூறினேன். நான் விடுதிரும்ப அவள் தந்தையுடனும் அவளுடனும் விடை பெறும்போது அவர்கள் என்னை அடிக்கடி வந்துபோகச் சொன்னர்கள். நானும் வாரத்திற்கு இருமுறை அவர்களைப் பார்க்கச் செல்லலானேன்.

நான் அங்குச் செல்லும் போதெல்லாம், சந்திரிகா தன் குழந்தையை எவ்வாறெல்லாம் வளர்க்கவேண்டும் என்பதைப் பற்றியே பேசினுள். அவள் தாய்மை உணர்ச்சியை உணர்ந்து என் உள்ளம் வியந்தது. ஒருநாள், "வசந்தன், நான் கூடிய சிக்கிரம் இறந்து விடுவேன். என் தந்தைக்கும் வயதாகிவிட்டது. அவரும் சில நாட்களில் இறந்துவிடுவார். நீதான் குழந்தை விமலாவை வளர்க்கவேண்டும்." என்று சந்திரிகா கூறினுள்.

"சந்திரிகா நான் குழந்தையை கவனித்துக் கொள்கிறேன். நீ தைரியமாக இரு. நீ இன்னும் பல ஆண்டுகள் குழந்தையின் பொருட்டாவது வாழ வேண்டும் என்றுதான் என் ஆசை.'! என்று நான் அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

"எனக்கும் உயிருடன் இருக்கவேண்டும் என்றுதான் ஆசை. ஆனல் என் உடல்நிலை......என்று அவள் கூறியபோது என் உள்ளத்தில் விவரிக்க முடியாத துயர் படர்ந்தது.

நாட்கள் செல்லச் செல்ல சந்திரிகாவின் உடல் நிலை குன்றிக்கொண்டேயிருந்தது. அவளின் உயிர் எந்த வினடி அவளை விட்டு போகுமோ என்று அஞ்சினேன். ஒருநாள் அன்று காலையிலிருந்தே சந்திரிகா கண்ணைத் திறக்காமல் இருந்ததால் நான் அவளுடைய குழந்தைக்கு ஆறுதல் அளித்த வண்ணம் அங்கு இருந்தேன். சந்திரிகாவின் தந்தை அவள் படுக்கையின் ஒருபுறம் உட்கார்ந்திருந்தார். அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டே இருந்தது. காலை சுமார் பத்துமணிக்கு அவள் கண்களைத் திறந்தாள். எங்களை ஒரு விநாடி பார்த்துவிட்டு கடைசி முறையாக அவள் கண்ணை மூடினுள்.

என் சந்திரிகாவின் வாழ்க்கையை நினைக்கும் போதெல்லாம் என் இருதயமே நடுக்கம் கொள்ளும். குழந்தையைப் பெற்றும் அவளால் குழந்தையை வளர்க்க முடியவில்லையே என்ற உணர்வு எனக்கு அடிக்கடி வரும். அப்பொழுதெல்லாம் என் உள்ளத்தில் பெருந்துயரம் ஏற்படும், அவள் குழந்தையை சிறப்பாக வளர்ப்பதில்தான் நான் என் வாழ்க்கையின் நிறைவை உணர்ந்தேன். ○

காளையுடன் ஓடிப்போன

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தேடிப் பார்க்கிருர்கள். தலைவி காணுமற்போன செய்தி தலைவியின் தந்தைக்கும், தமையன்மார்களுக்கும் எட்டுகிறது. அவர்களும் ஊரெங்கணும் தேடிப்பார்க்கிருர்கள். செவிலி ஊரெங்கும் சுற்றிப் பார்த்துவிட்டு எங்கணும் காணுமல், ஊரிலுள்ள வம்புப் பெண்டிரிடம் தலைவி பற்றி உசாவுகிருள். தலைவி, அழகிய தாடியும் மீசையும் கொண்ட கட்டிளங்காளை ஒருவனேடு களவொழுக்கம் நடத்திவந்த செய்தியையும், அவளும் அவனும் வெளியூருக்குப் புறப்பட்டுப் போயிருக்க வேண்டும் என்பதையும் செவிலிக்கு உணர்த்துகிருர்கள். அதுதான் உண்மையாக இருக்கக்கூடும் என்று எண்ணிய செவிலி அதனை நற்ருயிடம் தெரிவிக்கிருள். இருவரும் கண் கலங்கி வருந்துகிருர்கள்.

தனக்கு விருப்பமான கட்டிளங்காளை ஒருவனேடு திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்துடன், ஓடிப்போய் விடுவது அறநெறியின்பாற்பட்டதுதான் என்ருலும், அவள் எப்படிப் பாலைவனத்திடையே நடந்து செல்லுவதைத் தாங்கிக் கொள்ளப் போகிருள் என்பதை எண்ணி எண்ணி நற்ருய் மிகவும் வருந்துகிருள். தலைவி சிறுமியாக இருக்கும்போது மாளிகையின் முன்றிலில் பிற பெண்களோடு சேர்ந்து பாவை விளையாட்டும், பந்துவிளையாட்டும் ஆடி மகிழ்வதையும், வயலைக் கொடியைக் கன்றுபோட்ட பசுமாடு தின்ன முற்படும் போது, அழகிய வயிற்றில் அடித்துக்கொண்டு அழுததையும், பாலும் உணவும் கொள்ளாமல் அடிக்கடி விம்மி அழுததையும் நினைத்து நினைத்து நற்ருய் பெரிதும் அழுகிருள்.

"மகள் எப்படியும் வந்து விடுவாள்; அது பற்றிக் கவலைப்பட வேண்டாம்! என்று செவிலி நற்ருய்க்கு ஆறுதல் கூறுகிருள்.

"தேனேடு கலந்த இனிய பாலை ஊட்டினுலும், உண்ண மறுத்து விம்மி அழுபவள் எப்படிப் பாலைவனத்தின் கண்ணே நடந்து செல்லப் போகிருளோ? சுடுமணல் அவளை எப்படியெல்லாம் சுடுமோ?" என்று கூறி நற்ருய் கதறுகிருள்.

"புன்சிரிப்போடு தலைவனைப் பின் தொடர்வதற்கு அவள் ஒருப்பட்டுள்ளாளாதலால் அவளுக்கு ஒரு துயரமும் தோன்ருது! தலைவன் அவளை நல்ல முறையிலே போற்றிக் காப்பாற்றவே செய்வான்!" என்கிருள் செவிலி.

"மிக்க இளமையுடைய அவள் எவ்வாறு மனையறம் பூண்டு ஒழுகப் போகிருளோ? தெரியவில்லை! அவளைப் பிரிந்து, எப்படி நான் ஆறுதல் பெற்று வாழப்போகிறேன்?" என்று அஞ்சி நற்ருய் அழுகிருள்.

"மகள் மிக்க அறிவும், ஆற்றலும், திறமையும் உடையவளாதலால், அவள் இல்லறத்தை இனிதே நடத்துவாள் என்பதில் ஐயமில்லை! நாம் இனி வருந்திப் பயனில்லை!" என்று செவிலி ஆறுதல் மொழி பகர்கிருள்'

இது நற்றிணை 179 ஆம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டிக் காட்டப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் பாலைத் திணையைச் சேர்ந்த 'மனை மருட்சி' என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

இல்லெழு வயலை
ஈற்றுஆ தின்றெனப்
பந்து நிலத்து எறிந்து
பாவை நீக்கி
அவ்வயிறு அலைந்த என்
செய்வினைக் குறுமகள்
மானமர்ப்பு அன்ன
மையல் நோக்கமோடு
யானும் தாயும்
மடுப்பத் தேனேடு
தீம்பால் உண்ணுள்
வீங்குவனள் விம்மி
நெருநலும் மனையள்
மன்னே இன்றே
மையணற் காளை
போய் புகலாக
அருஞ்சுரம் இறந்தனள்
என்பதன்
முருந்தேர் வெண்பல்
மகிழ்நகை திறந்தே

[நற்றிணை-179]

[பொழிப்புரை; வீட்டினிடத்து முளைத்துப் படர்ந்த வயலைக் கொடியை ஆங்குக் கன்றை யீன்ற பசுவானது சென்று தின்றதினுலே அது கண்டவுடன் தான் விளையாடிக் கொண்டிருந்த பந்தை நிலத்தில் எறிந்துவிட்டு விளையாடும் பொம்மையையும் ஒரு பக்கம் வைத்துவிட்டு தனது அழகிய வயிற்றில் அடித்துக் கொண்டதுபோன்ற பலசெயல்களைச் செய்ய வல்ல என் இளமகள் மானின் பொருந்திய நோக்கம் போன்ற மையலைச் செய்யும் பார்வையுடனே, யானும் செவிலித்தாயும் தேனேடு கலந்த இனிய பாலையருந்துக வென்று ஊட்டவும், உண்ணுது விம்மி அழுபவளாகி நேற்றும் அத்தன்மையளாய் இருந்தாள்; அப்படிச் செய்வதெல்லாம் கழிந்தது; இன்று கறுத்த தாடியையுடை காளையாவானுடைய பொய்யா மொழியையே தனக்குப் பற்று கோடாகக் கொண்டு முருந்து போன்ற தன் வெள்ளிய பற்களிலே தோன்றும் புன்சிரிப்பைத் தோற்றுவித்து உடன்பட்டுச் செல்லுதற்குரிய பாலைவனத்தின் கண்ணே சென்ருெழிந்தனள்; இத்தகைய இளமையுடையாள் எங்கனம் சென்று மனையறம் பூண்டு ஒழுகுவாள் என்று அஞ்சுகிறேன்? எப்படி ஆறுதல் பெறுவேன்?

வயலை-வயலைக்கொடி; ஈற்றுஆ-கன்றினை ஈன்ற பசு; மானமர்ப்பு-மானின் நோக்கு; நெருநல்-நேற்று; மை-கறுத்த; அணல்-மேல்வாயின் கீழுள்ள தாடி; புகல்-பற்றுக்கோடு.

* * *

தலைவியை வீட்டிலே சிறைப்படுத்தி விடுவார்களோ, தான் அவளைக் காணுமற் போய் விடுமோ என்று அஞ்சும் தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு ஊரைவிட்டு ஓடிவிட மகளைப் பிரிந்துவாழும் நற்ருய் எவ்வாறு வருந்துகிருள் என்பதைப் புலவர் அழகுபட இச் செய்யுளில் விளக்கியுள்ளார்.

வயலைக் கொடியைக் கன்று போட்ட பசு தின்று அழித்ததை நோக்கி மகள் வயிற்றிலே அடித்துக்கொண்டு வருந்தியதைப்போல, தன் மகளை யாரோ ஒரு காளை பற்றிக்கொண்டு போக நற்ருயும் வயிற்றிலடித்துக்கொண்டு வருந்தினுள் என்பது மறைவாகப் பெறப்படும் பொருளாகும்.

இளம் பெண்கள் பந்தாடுதல், பாவையை வைத்துக் கொண்டு விளையாடுதல், தேனேடு கலந்த இனிய பாலை தாய் மகளுக்கு ஊட்டுதல், தலைவியை அழைத்துக்கொண்டு யாருக்கும் தெரியாமல் தலைவன் ஓடிப்போதல் போன்ற பழக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன. அழகிய முறையில் மீசையும், தாடியும் வளர்த்துக் கொள்ளும் பழக்கம் அக்கால ஆண்களிடத்துக் காணப்பட்டதாகத் தெரிய வருகிறது. ○

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...		20 காசு

டகம்

மாவீரன் மனைவி

(நெல்லை அருணன்)

காட்சி 1

[நிகழ்ச்சி: மாவீரன் வீதி வழியே வந்துகொண்டிருக்கிருன். அவன் நண்பன் எதிர்பட்டு]

ன் : மாவீரரே! மன்னரின் அழைப்பு மகிழ்ச்சி தரத்தக்கதாகத்தா னிருக்குமென்று எதிர் பார்க்கிறேன்.

ா-வீ : தன்மகளுக்கு நாடகக் கலையைப் பயிற்றுவிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டார். அரசரின் ஆணையாயிற்றே! ஆகட்டுமென்றுகூறி விடை பெற்றுவந்தேன்.

ன் : யாருக்குக் கிடைக்கும் இத்தகைய அரிய பணி. அரசகுமாரிக்கு ஆசிரியராக இருப்பதென்றல் எல்லோருக்கும் கிட்டுமா இந்த வாய்ப்பு-

ா-வீ : நீ வாய்ப்பு என்கிருய் நான் அதன் பயனுய் என்னென்ன வரப்போகிறதோ என்று திகைப்புக்கொள்கிறேன். மன்னன் மகளுக்கு நாடகக் கலையிலே ஆர்வம் எளிதில் ஏற்பட்டிருக்க முடியாது அதற்கொரு காரணம் இருந்தே தீரவேண்டும். அது எத்தகையதாயிருக்குமோ என்ற எண்ணம் திகிலைத்தான் தருகிறது. மேலும் நானிப்படிக் கலையை பயிற்றுவித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. அந்த அளவுக்கு நான் முற்றித் திறம்பெற்று விடவுமில்லை அதிசம் நடிப்பதால் நடிப்பில் மெருகேற்படுத்திக் கொண்டிருக்கிறேனே யல்லாமல் வேரில்லை. தவிரவும் நடிப்பென்பது சாமான்யமானதல்ல அருந்திறன்! சிறு மதலை முதல் அனைத்துயிரும் உயிர் வாழ்க்கைக்கு நடிப்பை உறுதுணையாகக் கொண்டுதான் வாழ்ந்து வருகின்றனவென்றலும் -யாவற்றையும் கண்டு-ஊகித்து-தேர்ந்து-தெளிந்து அவ்வவ்வற்றின் உருவாகத் தன்னை வகித்துக்கொண்டு நடிப்பது தான நடிப்பு. அதனை உணர்தற்கும் உரியதாக்கிக் கொள்ளுதற்கும் தனித் தகுதி வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பெருமையை நடிப்புக்கலை கொண்டிருப்பதனுலேதான் அது கண்டவர் கருத்தைக் கடிதில் கவர்கிறது. ஆனல் விரும்பியதும் பெற்றுக் கொள்ளத் தக்க விற்பனைப் பொருளாக அது இருப்பதில்லை-

நண் : இதனை அரசகுமாரிக்கு முதலில் விளக்கிக்கூறிவிடும் அதிலே அவள் மனப்பாங்கைத் தெரிந்து கொண்டபின் பயிற்சியை ஆரம்பிக்கலாம்.

மா-வீ : நானும் எத்துணையோ வழிகளை வகுத்து வைத்துக் கொண்டுதான் வருகிறேன். முதலில் இளவரசிக்கு நாடகக் கலையிலே ஆர்வம் என்பதை அரசர் வாயிலாகக் கேட்டதும் “அரச குலத்தினரின் விருப்பத்தை நாடகக் கலை பெற்றுவிட்டது” என்றெண்ணிப் பெருமிதம் கொண்டேன். அடுத்து “அரசியார் நாடகக் கலையைத்தேர்ந்திருந்தால் வருங்காலத்தில் நாடகக் கலையில் தேர்ந்த கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்பிருக்கும்” எனப் பூரிப்படைந்தேன். இறுதியில் யாவும் ஆட்சியின் போக்கைப் பொறுத்துத்தானே இருக்கிறது. நல்ல திறமை படைத்தவர்களின் வருகைக்கே தடையாகும் வண்ணம் ஆட்சியின் நேரதிகாரிகளின் தயவு பெற்றேர் நிறைந்துவிட்டால்; அரசியாரின் திறம் வெளிச்சென்று ஆராயப்போகிறது” என்ற முடிவுக்கு வந்தேன். என் ஆர்வமும் கிளர்ச்சியும் அத்துடன் ஒடுங்கி விட்டது......

நண் : சரி -- சரி! எப்படியாயினும் உமது பணி அரசிக்கு நாடகக்கலை பயிற்றுவிப்பது. தகுதியும் திறமையும் இருந்தால் முயற்சி வெற்றிதரும் இல்லையேல் தொல்லைமிகும், அவ்வளவுதானே.

மா-வீ : தகுதியில்லை யென்று கூறி மறுத்துரைக்கவும் முடியாத நிலையாயிற்றே என்ன செய்வது வாபோகலாம்......

(போகின்றனர்)

காட்சி 2

[அரசகுமாரி அலங்கரித்துக் கொண்டு வெளிச்செல்லுகிருள் அரசர் அங்கிருந்தவாறே அவளை அழைத்து]

அர : அருமை மகளே! இங்குவா! எங்கே கலைக்கூடத்திற்குத் தானே செல்கிருய்.

அ-கு : ஆமப்பா! அங்கே தான் செல்கிறேன் தாங்கள் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருக்கிறீர்களல்லவா!

அர : செய்திருக்கிறேன் மற்றுமொரு செய்தியை உனக்குத் தெரிவிக்கவே இங்கு காத்திருக்கிறேன்.

அ-கு : என்னப்பா அது?

அர : நீயோ இளம் வயதினள் பருவத்தின் வனப்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கிருய். அதிலும் அரச குடும்பத்தினளாகவும் இருக்கிருய் இதுவரை உன் ஆர்வத்தையும் போக்கையும் நான் தடை செய்யவில்லை. அவைகளைப் பற்றிய கவலையும் என் சிந்தையிலே எழுந்ததில்லை.

அ-கு : இப்போதும், எப்போதும் உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தமாட்டேன்.

அர : உன்வரையில் எனக்கந்த நம்பிக்கையுண்டு செல்வமே! ஆனல் இளமை எழிலும் இயற்கைச் சூழல்களும் இதயத்தை வலிந்து இழுத்துச் செல்வதாகத்தான் இருக்கும். அந்த மனப்போக்குக்கு மகளே! நீ உன் மதியைக் கொடுத்துவிட்டால் என் மனக் கோட்டைகள் மணல் கோட்டைகளாய் விடும். என் சொற்கள் உனக்குப் பிதற்றல்களாகக்கூடத் தோன்றலாம். மகளின் மன மகிழ்வும் இன்ப நிறைவுமே லக்ஷ்யமாகக் கொண்டிருக்க வேண்டிய நான் மகிழ்ச்சியை மறுக்கிறேன் -- இன்பத்தை ஏற்காதே என்கிறேன்.

அ-கு : அப்பா! தாங்கள் கூறுவதன் பொருளை உணர்ந்து கொண்டேன்! வெளியுலகத் தோற்றங்களிலே உள்ளத்தைப் பறிகொடுத்து வகையற்ற முறையில் வாழ்வை திருப்பிக் கொள்ளக் கூடாது அது தானே! தந்தையே மனம் பற்றுவதற்கும் தேட்டம் கொள்வதற்கும் தகுந்த காரணங்கள் வேண்டும் கண்டதும் மோகங் கொள்வது கன்னியர்க்கழகல்ல என்பதை உணர்வேன். மேலும் தாங்கள் கூறுவது போல அப்போ கண்டு அப்போதே உண்டாவதல்ல பற்றும் பாசவுணர்ச்சியும்.

அர : இதையவர்களிடம் எத்துணை முறைகள்தான் எடுத்துச் சொன்னலும் ஏற்க மறுக்கிருர்கள். என்மீதே குற்றம் சாட்டுகிருர்கள்.

அ-கு : யாரப்பா அவர்கள்!

அர : (திகைப்புடன்) ஆ! யாருமில்லை...யாருமில்லை. நீ போ! ஒன்றுமில்லையே! ஒன்றுமில்லை-போ-போ-போ

(போகிருள் போன சிறிது நேரத்திற்கெல்லாம் மூன்று மன்னர்கள் வருகின்றனர்)

மன் : 1 வாழ்க பேரரசே! வாழ்க! தங்கள் முயற்சிக்கும் செயலுக்கும் பாராட்டுத் தெரிவிக்கவே வந்திருக்கிறோம்.

மன் : 2 இதை முன்னதாகவே இவரேன் செய்யவில்லை என்று குற்றம் சாட்டமுடியும். என்றலும் முறையில் இதுபுதுமையானதால் விட்டுவிடுவோம்.

மன் : 3 மீண்டும் தெரிவிக்கிறோம்-ஒப்பந்தத்தின் மூலம் உம்மிடந்தான் இருக்கிறது என்றலும் அதை மீண்டும் எடுத்துப் படிக்கமாட்டீர் என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே நன்ருக நினைவிருக்கட்டும். உமது மகள் யாரைக் காதலித்துக்கொள்கிருளோ அவனுக்கு நாட்டாட்சியுரிமை கிடையாது. காதல் வயப்படாமல் பருவம் கடக்கின்றவரை இருப்பாளேயானல் நாங்கள் ஏற்படுத்தி வைக்கும் மணமகனை மணம் செய்துகொள்ள வேண்டும். அப்போது ஆட்சியுரிமையும் அளிக்கப்படும் இது ஒப்பந்தம்-மறந்திருக்கமாட்டீரே!

மன் : 1 அரசு நிலைக்க வேண்டுமென்பதற்காக மகளின் காதலுக்குத் தடையாயிருக்கக்கூடாது; காதலிக்கும் சூழ்நிலைகளை அவளுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது அதிலொருவிதி என்பதையும் மறந்திருக்கமாட்டீரே!

மன் : 2 இவற்றிற்கெல்லாம் அத்தாட்சியாகத்தான் மகளின் மனப் போக்குப்படி நாடகக்கலையிலே அனுப்பியிருக்கிருரே!

மன் : 3 நாமென்னவோ அவ்வாறுதான் சமாதானம் செய்து கொள்கிறோம். ஆனல் அவர் இந்த ஒப்பந்தத்தின் பேச்சைக் கேட்டாலே ஏதோ வெறுப்புக் கொள்பவர் போலல்லவா தோற்றமளிக்கிருர்.

அர : இல்லை! இல்லை! அதெல்லாம் எதுவுமில்லை நீங்களாக எதையெதையோ கற்பனை செய்துகொள்ளாதீர்கள்.

மன் : 1 வெறுப்பு ஏற்படுத்திக் கொள்ளட்டுமே! நாமாக வற்புறுத்தி வாங்கியதல்லவே ஒப்பந்த உடன்படிக்கை நமது நட்பும் கூட்டுறவும் துணையும் வேண்டுமானல் ஒப்பந்தம் தேவை என்றோம். அவரும் ஒப்புக்கொண்டார். அதன் மூலம் நமது பகையை அவர் விரும்பவில்லை என்பதுதான் அதன் பொருள் நமக்கு இந்த ஒப்பந்தத்தினுல் ஆகப்போவதென்ன? இப்போதே

வேண்டுமானாலும் உடன் படிக்கையை ரத்து செய்து கொள்வோம்--அவர் விரும்பினால்.

அர: நான் அவ்வாறு விரும்பவில்லை! ஒப்பந்தம் ஒப்பந்தமே அதில் அணுவும் தவறமாட்டேன்.

மூவரும்: அது எங்களுக்குத் தெளிவாக வேண்டுமே!

மன்: 1 இப்போது புரிந்து கொண்டோம்: சென்றுவருகிறோம்.

(செல்கின்றனர்)

காட்சி 3

[மாவீரனும் - மற்றொரு நண்பனும் பேசிக் கொண்டிருத்தல். இடம்: கலைக்கூடம்.]

நண்: மாவீரரே! அரசரின் தனியழைப்பு-மன்னர்கள் வலியவந்து காணுதல் எல்லாமே புதுமையாகவே இருக்கிறதே! ஒரு நாடகக் கலைஞனுக்கு ஏற்படும் நிலைமையா இது என்பதை எண்ண என் உள்ளம் பெரு மகிழ்ச்சியுறுகிறது.

மா-வீ: என் மனம் பெருங் கலக்கமடைகிறது. மன்னரோ எந்நாட்டிலும் இல்லாதவாறு தன் மகளுக்கு நாடகக் கலை பயிற்றுவிக்கச் சொல்கிறார். வந்த துணையரசர்களோ தாங்களும் உடனிருந்தே ஏற்பாடு செய்தது போல் இங்குவந்து கலைஞரே! உமக்குக் கிடைத்திருக்கும் பேறு எவருக்கும் கிடைக்காது, மன்னர் மகளின் காதலைப் பெற்றிருக்கும் நீரே பாக்கியசாலி! அவள் உள்ளம் நோகாமல் நடந்து உமது உள்ளத்திலே அவளுக்கு இடந்தரத் தயங்காதீர்" என்று கூறிச் செல்கின்றனர். இவற்றை நினைக்க ஒரு பக்கம் ஆச்சரியமாகவும்-மற்றொரு புறம் அச்சமாகவும் இருக்கிறது.

நண்: அஞ்சுவானேன் இதற்காக. நாடகக் கலைஞர்களின் உயர்வு நாடாள்வோரால் ஏற்றுக்கொள்ளப் படுகிறது என்றுதான்பொருள். காதலுக்குக் கலக்கங் கொண்டு தடைகூறி இடைமறித்துக் காலத்தாழ்வு செய்யவேண்டாம்-காவலர்களாம் எங்களாதரவு உண்டு என்பதைக் கட்டியங்கூறியிருக்கின்றனர்.

மா-வீ: மிகச் சாதாரணர்கள் கொள்ளும் முடிவு இது! இதில் மறைபொருள் ஏதோ இருத்தல்வேண்டும். செல்லச் செல்லக் கண்டுகொள்வோம், அதோ அரசகுமாரி வருகிறாள். நீ செல்!

(அவன் செல்ல, அரசகுமாரி வர)

அ-கு: வணக்கம்.

மா-வீ: வணக்கம்: வாருங்கள்

அ-கு: நான் தங்களை நாடி வந்திருப்பவள்.

மா-வீ: நாடகக்கலை பயில அறிவேன்: (அழைத்துச் சென்று) இப்படி அமருங்கள் நான் கூறுவதைக் கவனமாகக் கேட்கவேண்டும். நடிப்பு என்பது குறிப்பிட்ட ஒருதுறை ஒரு தலையாய தல்ல எல்லாத் துறையிலும் தன்னை ஆட்படுத்திச் செயலாற்ற வேண்டும் அதற்குக் கருவாக இருப்பது எல்லா உயிரினத்தின் தன்மைகளையும் உணர்ச்சிகளையும் கண்டு தெளியவேண்டும். 'சிங்கம் போல்' என்றால் வேறு தோற்றத்தில் சிங்கத்தை ஒத்த பாவனைகள் வேண்டும் தென்றலின் இனிமையை உணர்வதாக, சிறிதளவு காற்றுக்கூட இல்லாத இடத்தில் நடிக்கவேண்டும்-விழி கண்களுடன் கண்ணற்றவன்போல் உணர்த்த வேண்டும். இவற்றை நாம் காண்பதுதான் முதற்பயிற்சி அதனை அழகும் அமைவும் சேர உருவாக்கித் தருவதே என் பணி!

அ-கு: கலைஞரேறே! இவற்றை நாடக நூல்களின் வாயிலாக ஒரு சிறிதே அறிவேன்.

மா-வீ: ஆயினும் உங்கள் திறமையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மறுப்பில்லையானால்-

அ-கு: என் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்புத் தேடிவந்திருக்கும் நான் மறுப்பதுவும் உண்டா?

மா-வீ: அப்படியானால் திறமை தென்பட நடித்துக் காட்டுங்கள் நான் அதன் நுணுக்கங்களைத் தெரிந்து திருத்த மிருந்தால் தெரிவிக்கிறேன்.

அ-கு: எப்போ எப்போ என்றுதானே காத்திருந்தேன். இதோ-"வளமான பூங்கா! வடிவழகும் குண நிறைவும் பொருந்திய"

மா-வீ: நிலைவிளக்கம் வேண்டாம். பாத்திரங்களின்செயல் முறைகள் தென்பட்டால் போதும்.

அ-கு: அப்படியே ஆகட்டும். "மந்தாரமான அந்திபோது மனதை மயக்கும் மந்தமாருதம் இவைகளெல்லாம் இணைந்திருக்க என் மனதைக் கவர்ந்தவரே! தாங்கள் மட்டும் ஏன் தனிமையில் சென்றிருக்கிறீர்கள். பேதை என் உள்ளம் வேதனைப்படுவதை யறியாது சோதனை செய்வதாகுமா? இனியும் சொல்லவேண்டுமா? அன்பாக பேசியும் ஆதரவாக உடனிருந்தும் இன்பத்தின் எல்லைக்கு என்னை எடுத்துச் செல்லவேண்டிய தாங்கள் வன்நெஞ்சங் கொண்டு என் நெஞ்சை வேலாலும் வாளாலும் புண்படுத்தல் அழகா!"

மா-வீ: அழகே! உன் இளமை நெஞ்சத்தின் வேகத்திற்கு இணைந்துவர நான் இம்மியும் இயலாதவன். காட்சிக்கும் இயற்கைக்கும் இதயத்தைப் பறிகொடுத்தல் இளவரசியாம் உனக்கு ஏற்றதன்று இன்பத்திலே நாட்டம் இயல்புதான். ஆனால் அது ஏற்படுத்தித்தரும் முடிவு துன்பமாக மாறிவிடும்.

அ-கு: தாங்களென்ன சொல்கிறீர்கள்.

மா-வீ: தாங்கள் கூறிய உரையாடலுக்குப் பதிலுரைத்தேன். பாத்திரங்களின் தன்மையை உருவாக்குவது நாம் தானே. தாங்கள் அதற்காக நடிப்பின் பாதையிலிருந்து ஏன் விலகவேண்டும்!

அ-கு: அன்பரே!

மா-வீ: அரசகுமாரி!

அ-கு: என் பெயர் அமுதா!

ம-வீ: அப்படி அழைக்க நான் தகுதியற்றவன்

அ-கு: நான் தங்களுக்கு உரிமையாய் விட்டவள்.

ம-வீ: ஒருபோதும் ஏற்பட இயலாத உறவுமுறை! தாங்களோ அரசரின் அருமைச் செல்வி! நானோ நாடகக்காரன். நாடாள்வோன் மகளெங்கே! நாடகக்காரன் நானெங்கே.

அ-கு: இதோ! இருவரும் இங்கேயே இருக்கிறோம். நம் உறவு இங்கேயே உருப்பெற வேண்டும்.

மா-வீ: தாங்களிங்கு வந்தது கலைபயில.

அ-கு: அல்ல! தங்களுக்கு என் நிலைதெரிய! அரங்கிலே கண்ட அன்றே ஒரு அரசர்க்குரிய தன்மைகள் அத்துணையும் உங்களிடம் அமைந்திருக்கக் கண்டேன்.

மா-வீ: அது நான் தாங்கிய பாத்திரம்.

அ-கு: அரசாட்சியும் அப்படியொரு சூத்திரந்தானே! மன்னனுக்கென்றொரு இலக்கணம் அதற்குள் அவர்கள் அடைக்கலம், தவிரவும் உண்மை அரசனைவிட அந்த வேடந் தாங்குகின்றபோது மேம்பட்ட ஒரு தனி நிலையை நீங்கள் கைப்பற்றுகிறீர்கள்.

மா-வீ: நடிப்பிலே இருப்பவைகள் வாழ்க்கைக்கு எடுத்துரை[illegible]இயலாதன அரசகுமாரி!

அ-கு: அமுதா! என்னும் பெயர் பொருத்தமில்லையா எனக்கு?

மா-வீ: அப்படி அழைக்கும் துணிவு இன்னும் ஏற்படவில்லை எனக்கு.

அ-கு: எவர் தடுத்தாலும் இந்த ஏந்திழை உங்களுக்கு-

மா-வீ: எத்தனை சொன்னாலும் நான் ஏற்றவனல்ல உங்களுக்கு.

அ-கு: ஆயினும் நான் வாழவேண்டாமென்ற எண்ணமோ தங்களுக்கு?

மா-வீ: அவசர முடிவு ஆகாது தங்களுக்கு!

அ-கு: வீண்பிணக்கு! நானேதும் அறியாத் தனத்தால் புரியாத் தன்மையால் ஆராயுந் திறங்கெட்டு உங்களை அடுத்து வரவில்லை! என் தந்தை இன்றைய அரச[…] அவர் ஆயுளுக்குப்பின் நா[…] இன்னொருவரை யடைந்[…] தான் வாழவேண்டும். அ[…] என் போன்ற பெண்ணி[…] நியதி ஆனாலும் நான் மீண்[…] மொரு மன்னனை மணந்[…] அரசபோக மெய்தி வா[…] வதைவிட சாதாரணக் கு[…] களுள் ஒருவருடன் கூடிவாழ கருதுகிறேன். அத்தகை[…] துணை தங்களைப்போ[…] வாய்த்தல் நலம் எனவு[…] ஆசைகொள்ளுகிறேன்.

மா-வீ: அரசகுமாரி!

அ-கு: அமுதா என்றேனே

மா-வீ: அ--மு--தா--

அ-கு: அத்தனையும் அமுத[…] கவே என் செவி ஏற்கிறது[…] சிந்தை சிலிர்க்கிறது-உள்ளம் முகிழ்க்கிறது.

மா-வீ: என் மனம் பதை[…] கிறது. கலை பயிற்றுவிக்[…] வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தபோதே சிறி[…] கலங்கினேன். கட்டழகு[…] காரிகைக்கு கட்டடங்கா[…] கலையை எப்படி நான்பயிற்று விக்க என்று திகைத்தேன் அடுத்து அரசரின் துணை மன்னர்கள் வந்து நான் அரசகுமாரியின் காதலை[…] பெற்றுவிட்டேன் என்று[…] பாராட்டிச் சென்றனர் அவர்களின் சொல்லுக்கு[…] பொருள்புரியாமல் குழம்[…] னேன். இங்கு வந்த உன் மனப் போக்கைப் பார்த்[…] தும் உள்ளபடியே என் குழப்பம் அதிகரிக்கிறது.

அ-கு: இதில் குழப்பத்தி[…] கென்ன அவசியமிருக்கிறது[…] மகளின் மனநாட்டத்தை[…] தந்தை ஏற்றுக்கொண்டார் துணை மன்னர்கள் தங்கள் தலை மன்னரின் கடமைக்கு[…] துணை நிற்கின்றனர்.

மா-வீ: அப்படித்தான் எள்[…] தில் எண்ணக்கூடும் மகளின் மனப்போக்கைத் தந்தை அனுமதிக்கலாம். ஆனால் மன்னர் பரம்பரையினர் மா[…] றானின் கூட்டுறவை ஏற்[…] மாட்டார்கள் ஆகவே அவர் கள் ஏதோ நீ மாற்றானைப் பெறுவதை எதிர்பார்ப்பது போல்தோன்றுகிறது.

அ-கு: தோன்றுவதென்ன. நானே விரும்புகிறேன்.

மா-வீ: உன் விருப்பத்தை நான் வரவேற்கிறேன். என்றாலும் எதிரியின் சூதுகள் யாதேனும் இருக்குமானால், அதற்கு உன் விருப்பம் வழி வகுப்பதாக இருக்கக் கூடாது. ஆகவே நான் சொல்கின்ற வழியைக் கைக் கொள். உன் தந்தையிடம் சென்று காதலை வெளியிடு, உண்மை புலனாய்விடும் பிறகு இங்குவா! ஆவனவற்றைச் செய்துகொள்வோம். புறப்படு.

அ-கு: இப்போதே செல்ல வா!

ா-வீ : கேள்விக்கும் பதிலுக்குமே வெகு நாழிகையாகும். தாமதியாதே செல்.

(செல்கிருள்)

காட்சி 4

[அரசவையில் சேவகன் வந்து அறிவித்தபின்னர், மலை நாட்டு மன்னன் வருகிருர்.]

அர : வருக! மலை நாட்டு மன்னு!

ம-ம : தங்கள் வரவேற்பை எதிர்நோக்கியோ, தூதனுப்பியோ வரவேண்டிய நான் அரசியல் முறையிலேயே புதியதொரு சூழலை ஏற்படுத்தி வந்திருக்கிறேன். போர் அறிவிப்பை ஒரு மன்னன் மற்ருெரு மன்னனின் அவையிலே சென்று அறிவிப்பது இதுதான் முதல் முறையாகும்.

அர : போரா?

ம-ம : ஆம்! ஆக்ரமிப்புப் போர்! அறிவிப்பு தங்களுக்கு மட்டுமல்ல! துணை மன்னர்களுக்கும் அழைப்பனுப்பி விட்டுத்தான் வந்திருக்கிறேன். அரசியல் முறை நுணுக்கங்கள் அத்துணையும் அறிந்துதான் வந்திருக்கிறேன்.

அர : அமருங்கள்! தாங்கள் எந்த முறையில் வந்தாலும் எனக்குரிய தகுதி முறைப்படிதானே நான் வரவேண்டும். அதோ துணை மன்னர்களும் வந்துவிட்டார்கள்.

துணை : 1 மன்ன--என்ன இது?

ம-ம : திடீர் படையெடுப்பு. ஆக்ரமிப்புப் போர் அனைத்திலும் வல்ல துணைவர்கள் நீங்கள் உடனிருக்கிறீர்கள் என்ற துணிவுடன். அதுவும் யாரைப் பகையாகக் கருதி வந்திருக்கிறேனே அந்த மன்னனின் அவைக்கே! என்னைச் சிறைப்பிடித்துவிடலாம் ஆனல் உடனே நீங்களும் சிறையாய்விடுவீர்கள். அதற்கான ஏற்பட்டுகளுடன்தான் வந்திருக்கிறேன் ஒப்பந்தத்தின் படி உதவுவதுதானே உங்கள் கடமை! அதற்காகத்தான் உங்களுக்கு அழைப்பனுப்பினேன்!

துணை : 2 மன்னர் ஒப்பந்தத்தின் ரகசியத்தை வெளியிட்டுவிட்டார்.

ம-ம : குற்றம் அவருடையதல்ல! சூது அதிக நாள் பலிக்காது என்பதன் எடுத்துக்காட்டு! உங்களுடன் என் வாதம். போர்! ஏற்கிறீர்களா? அல்லது எம்மிடம் விட்டுக் கொடுக்கிறீர்களா? அரசியல் முறையும் நுணுக்கங்களும் தெரிந்தவர்களாயிற்றே நீங்கள்? ஆக்ரமிப்புப் போரொன்றும் புதுமையல்லவே!

துணை : 3 இல்லைதான்! இதில் வஞ்சகமும் கலந்திருக்கிறது.

ம-ம : வஞ்சகம் நிறைத்தது நீங்கள்! உடன்படிக்கை செய்துகொண்டீர்கள் மன்னனிடம். மன்னன் தனியாளல்ல! அவருக்குத் துணையாயிருந்து இந்த அரசை நிர்வகிப்பவர்களைக் கலந்துகொள்ளவேயில்லை! அது மட்டுமல்ல உங்கள் மனப்போக்கின் தன்மை அதிலே துலங்குகிறது. மகள் வாழ்வைப் பணயம் வைத்து மன்னனின் ஆட்சியைக் கைப்பற்ற நீங்கள் செய்த சதி நோக்கம் வெளியாகியதில் தவறென்ன! என் கேள்விக்குப் பதில் இன்னமும் கிடைக்கவில்லை--மறுப்புமில்லை. போரறிவிப்புக்குப் பதிலறிவிப்புமில்லை ஆட்சியின் சூழலில் இது அவமானத்தை விளைவிக்கிறது. இனியும் தாமதிக்கப்போவதில்லை நான். அதோ மக்கள் கூட்டம் திரண்டுவருகிறது. பதில் கூறுக்கள் அல்லது நான் கூறுகிறேன்.

மக்கள் : வாழ்க மன்னர்! வாழ்க மலைநாட்டரசர்!

ம-ம : அருமைக் குடிமக்களே! இந்நாட்டையும் என் நாட்டைப் போல் குடியாட்சியாக்கவே வந்திருக்கிறேன் துணை வேந்தர்களான இவர்கள் பிடியிலிருந்து நாட்டை மீட்டு உங்கள் ஆட்சியாக்குகிறேன் இனி மன்னர் உங்கள் பிரதிநிதி: அவரிடம் நேரடித் தொடர்புகொள்ள உங்கள் மதியமைச்சர், மற்றுமுள்ளோர் துணைபுரிவர் உங்கள் நல்லெண்ணத்தின் பயனல், அமைச்சரின் கடமை உணர்ச்சியால் நாடு மீட்கப்பட்டது. மன்னருக்கு முறை மந்திரியைத் தழுவி நிற்றல் அதன்படி ரகசிய ஒப்பந்தத்தின் முறை எனக்கு அறிவிக்கப்பட்டது. இப்போது நானும் அவர்கள் ஒப்பந்தத்தின்படியே நடந்துகொள்கிறேன். ஆனல் முறை மட்டும் வேறு. அவர்கள் மன்னர் மகளுக்கு யாரோ ஒரு மதியற்றவனை - தங்கள் சொல்லுக்கு மடங்கிவாழும் ஒருவனைக் கணவனுக்கியிருப்பார்கள். நான், என் துணைவரும் நல்ல அரசியல் தந்திரியும் தர்க்க சாத்திர நிபுணருமம் மக்கள் மனமகிழ்ந்து நிலையறிந்து செயலாற்றுபவருமான மாவீரனை பெயருக்கேற்ற ஆற்றல் வல்லோனை உங்கள் சார்பில் தலைமையாக்கி - அரசகுமாரியின் உள்ளத்தை அவருக்கு இருக்கையாக்குகிறேன்.

(கைப்பிடித்துக் கொடுக்கிருர். மன்னர் மகிழ்கிருர். துணை மன்னர்கள் தூங்கிய தலையினராய்ச் செல்கின்றனர்)

மக்கள் : வாழ்க மலை நாட்டு மன்னர்! வாழ்க மாவீரர்! வளர்க திருநாடு.

(தனிமையில் மாவீரனும் அமுதாவும்)

மா-வீ : உன் சொற்களை உடனடியாக ஏற்றிருந்தால் இந்த நிலையை எய்தியிருக்க முடியுமா?

அ-கு : அரசியல் சூழல்களை அறிந்துகொள்ள என்னல் முடியுமா?

ம-வீ : அரசகுமாரி!

அமு : அல்ல! அல்ல! இப்போது குடிகளில் நாளெருத்தி. தாங்கள் மன்னரல்ல--மா - - -

மா-வி : வீரன்—

அமு : நானவர் மனைவி

(மலை நாட்டரசர் வந்து

ம-வீ : மாவீரன் மனைவியே! உன் கணவனுக்கு அவ்வப்போது துணையிருந்து இல்லமும் அரசும் இலக்கணம் கெடாது வாழ்வீர்களாக. ()

1857

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளர்ச்சிக்குப் பின், கிளர்ச்சியைத் தூண்டிய குற்றத்துக்காக 200 வீரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

வேலூரில் கிளர்ச்சி ஆரம்பித்த அதே நாளில், சென்னைக் கோட்டையிலும் தென்னகப் போர்வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்தக் கிளர்ச்சியிலும் பலர் கொல்லப்பட்டும், தூக்கிலிடப்படும் ஒழிக்கப்பட்டனர். வேலூர், சென்னை இரு கிளர்ச்சிகளும் அடக்கப்பட்ட போதிலும், அதன் கொந்தளிப்பு மறைய நீண்டநாட்களாயின.

பல நூற்றுண்டுகளாக அடிமைப் படாது வாழ்ந்த தென்னகம் அசோகன் காலத்தில், குப்தர் காலத்தில், சுங்கர்கள் காலத்தில், அடிமை அரசர்கள் காலத்தில் அடிமைப்படாது மீண்ட தென்னகம், ஆங்கிலேயர் வரவுக்குப்பின் பல்வேறு அகப்புறச் சூழ்நிலைகள் காரணமாக உரிமையிழந்து, இந்தியத் துணைக்கண்டத்தில் மற்றப் பகுதிகளுடன் சேர்ந்து பிணைக்கப்பட்டு, அடிமைத் தளையில் மாட்டப்பட்டது. அந்த இருண்ட காலத்திலும் ஒளிக்கீற்றுகள் அவ்வப்பொழுது தோன்றியிருக்கின்றன.

விடுதலைப் போராட்டம் ஒரு நீண்ட தொடர்கதை. தென்னகம் அதில் ஓரோர் கட்டங்களைத் தாண்டியிருக்கிறது. ()

நீராவிக் கப்பல் உண்டான கதை-(1)



நீண்ட காலமாகக் கட்டைகளைக்கட்டி மிதக்கவிட்டு மரத் துடுப்புகளால் தண்ணீரைத்தள்ளி கடலில் மனிதர்கள் சென்றுவந்தார்கள். பாய்மரக்கப்பல்கள் காற்றின் உதவியால் அசைந்து சென்றன. இன்றுள்ள கப்பல்கள் துடுப்புகளோ, பாய்மரமோ இன்றி செல்கிறது. இந்த நீராவி இயந்திரக் கப்பல்கள் உண்டாக முதற்காரணமாக இருந்தவர் ராபர்ட் புல்டன் என்பவர்.

ராபர்ட் புல்டன் அமெரிக்காவில் லிட்டில் பிரிட்டன் என்ற இடத்தில் 1765ல் பிறந்தார். ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவரானதால், இளம் வயதிலேயே வேலைக்குப் போகவேண்டியிருந்தது. பிள்ளையைப் படிக்க வைக்கவேண்டுமென்ற எண்ணம் பெற்ருேர்களுக்கும் உண்டாகவில்லை. புல்டன் தனது பத்தாவது வயதில் பிலடல்பியா நகரில் ஒரு நகை வியாபாரியிடம் வேலைக்கமர்ந்தான்.

சிறுவனை புல்டன் சுறுசுறுப்புடனும், புதிதாக எதையும் செய்யும் தன்மையுடனும் இருந்தான். படங்கள் வரைவதிலும் மீன் பிடிப்பதிலும் அவனுக்குப் பிரியமதிகம் ஓடத்தில் போக, துடுப்புகளை அசைத்துப் போவது அவனுக்குச் சிரமமாகப் பட்டது. ஓடத்தில் பலகைச் சக்கரம் சுழன்று தண்ணீரைத் தள்ளிக்கொண்டு போகும் முறையை கண்டுபிடித்து உபயோகித்தான். அப்பொழுது அவனுக்கு வயது 13

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.
[illegible] செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண்: 55697